பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 27 வியாழக்கிழமை (11-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:228

# முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றுகூடி புலிகளைப் பேச்சுக்கு அழைப்பு!

## உரிமைகள், அதிகாரப்பகிர்வு குறித்து ஆராய

கொழும்பு,ஜூலை11

**முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு, அரசியல் உரிமைகள் போன்றவை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசித் தீர்வுகாண விரும்புகின்றோம். எனவே எங்களுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் முன்வர வேண்டும்.**

**- இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சமாதானத்துக்கான ஒன்றியம்.**

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் - பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த - முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றுகூடி மேற்படி அமைப்பை உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று நாடாளுமன்றத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினர். பின்னர் அங்கு செய்தியாளர்களை அவர்கள் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்கள் எம்.எச்.முஹம்மது, ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் ஏ.எச்.எம்.பௌஸி உட்படப் பத்திற்கும் அதிகமான முஸ்லிம் எம்.பிக்கள் பங்குபற்றினர்.

எனினும், தேசிய ஐக்கிய முன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்கூடல் ஊடான வங்களாவடி - சுருவில்
# வீதியைத் திறக்கக் கோரி வெகுஜனப் போராட்டங்கள்

ஊர்காவற்றுறை,ஜூலை11

வேலணை வங்களாவடியில் இருந்து புளியங்கூடல் ஊடாக சுருவிலுக்குச் செல்லும் பிரதான வீதியைப் பொதுமக்கள் போக்குவரத்துக்குத் திறக்கவேண்டும் என்று கோரி வெகுஜனப் போராட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தீவக மக்கள் நலன் காப்பகத்தின் பிரமுகர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்ட இந்தப் பாதையை தீவுப்பகுதிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரி மூடியுள்ளார் என்றும் -

தற்சமயம் நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை இந்தச் செயல் மீறியுள்ளது என்றும் - அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# கலவரங்களின் பின்னணியில் தீய சக்திகளின் சதி உண்டு!
## புலிகளின் தளபதி கருணா கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜூன்11

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்கள், வன்முறைச் சம்பவங்கள் என்பவற்றின் பின்னணியில் சில தீய சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டுள்ளன. முஸ்லிம் சமூகத்தில் உள்ள சில தீவிரவாதிகளும், இராணுவத்துக்கு அடிவருடிகளாகச் செயற்படும் சில தமிழ்த் தரப்பினருமே இவற்றில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மகாணத் தளபதி கருணா.

கொக்கட்டிச்சோலைக்கு நேற்று விஜயம் செய்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்ட் புருகோவிட்டுடன் நடத்திய பேச்சுக்களின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரி லினா மெலன்ட், பீற்றர் ஹுலான்ட், சமாதான செயலகத்தைச் சேர்ந்த ஜே.குணரத்தின, விங் கொமாண்டர் ராஜா விக்கிரமசிங்க, மட்டக்களப்பு கண்காணிப்புக் குழுத் தலைவர் லார்ஸ் பெக் ஆகியோரும் புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பிரமுகர் புலித்தேவன், மட்டு. - அம்பாறை

(12ஆம் பக்கம் பார்க்க)

# தம்மைப் பதவி விலக்குவதற்கு இடமில்லை என்கிறார் ஜனாதிபதி
## அரசின் சவாலை எதிர்கொள்ளவும் அவர் தயாராம்

கொழும்பு,ஜூலை11

குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்றின்மூலம் தம்மைப் பதவி விலக்குவதற்கு ஆளும் ஐக்கிய முன்னணி அரசு எடுத்திருக்கும் முயற்சிகளை எதிர்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயார் என்றும் -

தமக்கு எதிராக குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு அடிப்படை ஏதும் இல்லை என்றும் ஜனாதிபதி குமாரதுங்க கருதுகின்றார் என்றும் -

ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தகவல் வெளியிட்டார்.

ஐதேமுன்னணி அரசின் அரசியல் விவகாரக் குழு கடந்த 4ஆம் திகதி அலரிமாளிகையில் கூடியது. ஜனாதிபதிக்கு எதிராக குற்றவிசாரணைப் பிரேரணை கொண்டுவருவது என்று இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணையின் நகல் வரைவைத் தயாரிக்கும்படி தனது மூத்த அமைச்சர்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கான அரசமைப்புத் திருத்தங்களைச் செய்வ

(12ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபை முதலமைச்சர்கள் நடத்திய ஊர்வலத்தில் தடியடி!

கொழும்பு,ஜூலை11

ஆறு மாகாணசபைகளின் முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் ஒன்றுகூடி கொழும்பில் நேற்று எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தைத் தடுத்துநிறுத்துவதற்குப் பொலீஸார் முயன்றவேளை இடம்பெற்ற அடிதடியில் ஐவர் காயமடைந்தனர்.

மாகாணசபைகள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை அரசிடம் எடுத்துக் கூறுவதற்காகவே மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் இப்போராட்டம் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மேல்மாகாணசபை முதலமைச்சரின் அலுவலகத்துக்கு எதிரே இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட இவர்கள், பிரதமரைப் பார்ப்பதற்காக அலரிமாளிகையை நோக்கிச் சென்றனர். தர்மபால மாவத்தையை அவர்கள் நெருங்கியபோது பொலீஸார் அவர்களைத் தடுத்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



..அப்ப ஒருக்கா மோதிப் பாத்திடுறது என்று அம்மணி தீர்மானிச்சிற்றா போல.

# நீர்கொழும்பு சிறைக் கைதிகள் விடுதலைக்கு இறுதிக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை11

தங்களை விடுதலை செய்வதற்கு அரசுடன் பேசி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீர்கொழும்புச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைதிகள் இது தொடர்பாக அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எங்கள் விடுதலை குறித்து தமிழ் எம்.பிக்கள், உள்துறை அமைச்சர், சட்டமா அதிபர், எதிர்கட்சித் தலைவர், பிரதமர் ஆகியோருக்குக் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்தோம். எமது கோரிக்கையை வலியுறுத்தி மூன்றுமுறை உண்ணாவிரதமிருந்தோம். எமது போராட்டங்களை அடுத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# இன்று சென்னை திரும்பும் வைகோ உடன் கைதாவார்!
## போராட்டம் வெடிக்கும் என்று தொண்டர்கள் எச்சரிக்கை

சென்னை,ஜூலை11

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இன்று சென்னை திரும்பியதும் கைது செய்யப்படுவது உறுதியாகிவிட்டது. அவர் பிணையில் வெளிவர முடியாத பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது.

வைகோ கைதுசெய்யப்பட்டால் தமிழகத்தில் போராட்டம் வெடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. போராட்டத்தில் குதிப்போம் என்ற எச்சரிக்கையை ம.தி.மு.க. தொண்டர்கள் விடுத்திருக்கிறார்கள்.

சென்னை விமான நிலையத்தில் வைகோவைக் கைது செய்வதற்காக திருமங்கலம் பொலீஸார் சென்னையில் முகாமிட்டிருக்கின்றனர். இன்று பிற்பகல் ஒருமணிக்கு வைகோ அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்புகிறார்.



'பொடா' சட்டத்தின் கீழ் ஏற்கனவே வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள வைகோ

(12ஆம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கிமுனையில் மிரட்டி சங்கரத்தையில் கொள்ளை
## நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்

சங்கானை,ஜூலை11

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று வீட்டில் இருந்தவர்களை துப்பாக்கி முனையில் மூன்றரை மணிநேரம் பணயம் வைத்து அங்கிருந்து நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

அந்தக் கொள்ளைக் கோஷ்டி தப்பிச்சென்றவேளை வீட்டுக்காரர்கள் சத்தமிட்டனர். உடனே அங்கு மக்கள் கூடுவதைத் தடுக்க அந்தக் கோஷ்டி வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சங்கரத்தையில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தப் பரபரப்பான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வெளியே செல்லமுடியாதவாறு கதவுகளைப் பூட்டி வீட்டைச் சோதனையிடும் பாணியில் அங்கிருந்த சகல நகைகளையும் கொள்ளைக்கோஷ்டி அபகரித்தது என்றும் -

நகைகளின் பெறுமதி ஐந்து லட்சம் ரூபா என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு



இங்கிலாந்து - இந்திய மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் இங்கிலாந்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் ஒரு காட்சி.

## மகளிர் கிரிக்கெட்டில் இந்தியா படுதோல்வி

லண்டன்,ஜூலை11

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் இந்தியா - இங்கிலாந்து அணிகளிடையேயான மகளிர் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி பெரு வெற்றியீட்டியுள்ளது.

சுழல்பந்து வீச்சாளர் லாரா ஹார்ப்பரின் சிறப்பான பந்து வீச்சால் இங்கிலாந்து இலகுவாக இந்திய அணியை வென்றது. இந்த ஆட்டத்தில் 5 ஓவர்கள் பந்து வீசிய லாரா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவுசெய்தது.

இந்தியத் துடுப்பாட்ட வீராங்கனைகள் நேற்றைய ஆட்டத்தில் சிறப்பாக விளையாடவில்லை. எந்த வீராங்கனையும் இரண்டாம் இலக்கத்தைத் தாண்டி ஓட்டங்களைப் பெறவில்லை. இந்திய அணியில் தனிப்பட்ட வீராங்கனை ஒருவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்டங்கள் 9ஆகும். இறுதியில் இந்திய அணி 59 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றி பெற்றது. (ம)

## இந்திய கிரிக்கெட் அணி நியூஸிலாந்துக்கு சுற்றுலா

இந்தியக் கிரிக்கெட் அணி இவ்வருட இறுதியில் நியூஸிலாந்திற்கு விஜயம் செய்யவுள்ளது. 2 டெஸ்ட் போட்டிகளிலும், 7 ஒருநாள் போட்டிகளிலும் இந்திய - நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன. நியூஸிலாந்தில் இருதரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் 7 ஆட்டங்கள் நடைபெறவுள்ளமை இதுவே முதல்தடவையாகும்.

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இரு அணிகளும் தயாராவதற்காகவே ஒருநாள் போட்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை - ஜனவரி 16 ஆம் திகதிக்கு முன்னர் தாயகம் திரும்ப வேண்டுமென இந்திய அணி கோரியுள்ளது. இதனால் குறுகிய காலத்திற்குள் இப்போட்டிகளை நடத்தவேண்டியுள்ளது - இவ்வாறு நியூஸிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மார்டின் ஸ்னெட்டன் தெரிவித்துள்ளார். (ம)

## கண்காட்சிப் போட்டியில் இலங்கை

லண்டன்,ஜூலை11

இலங்கைக் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் கண்காட்சி கிரிக்கெட் போட்டியொன்றில் பங்குபற்றவுள்ளது.

இப்போட்டியில் தொழில்சார் கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் மாஸ்ரேஸ் அணியுடன் இலங்கை அணி மோதவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி ஷேன்ஸீ நகரில் உள்ள டெனிஸ் கெம்ப்டன் ஓவல் மைதானத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இலங்கை அணி பங்குபற்றுவதற்கான போக்குவரத்துச் செலவு, தங்குமிடச்செலவு ஆகியவற்றைையும் போட்டி ஏற்பாட்டாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி நடைபெறவுள்ள மைதானம் இலங்கையரான குறுக்கா விஜேசூரியவுக்குச் சொந்தமானதாகும். இது 'மிடில் செக்ஸ்' பிராந்திய கிரிக்கெட் கழகத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை இலங்கை அணி தாயகம் திரும்பவுள்ளது. (ம)

## 'நட்வெஸ்ற்' இறுதியாட்டம் சனியன்று லோர்ட்ஸில்!

லண்டன்,ஜூலை11

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் சனிக்கிழமை இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும்.



இறுதியாட்டத்தில் பங்குபற்றும் இங்கிலாந்து அணியில் ஜேம்ஸ் கிர்ட்லீக்குப் பதிலாக டொமினிக், குறொக் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். கிர்ட்லீ காயம் காரணமாக இறுதியாட்டத்தில் விளையாடவில்லை. இதனால் அவருக்குப் பதிலாக குறொக் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் தோல்வியுற்ற இந்திய அணியும், இறுதியாட்டத்திற்கான தனது வீரர்களில் பெரும் மாற்றங்களை செய்யும் என்று தெரிகிறது. (ம)

### இன்றைய நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை11

கொக்குவில் சிவகுரு பொற்பதி விளையாட்டுக்கழகம் சிவகுரு வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 3.30 மணி - பொற்பதி வி.க. எதிர் சென்.நிக்கிலஸ் வி.க.

☆ மாலை 4.30 மணி - சென். அன்ரனீஸ் வி.க. எதிர் கரவெட்டி கலட்டி வி.க. (ம-5)

# 'வற்' வரி அரசமைப்புக்கு முரண் விதியைத் திருத்தப் பணிப்பு!

### நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து சபாநாயகர் சபையில் அறிவிப்பு

அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் பெறுமதிசேர் 'வற்' வரி அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது. உயர் நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்திருக்கிறது.

இதனால் 'வற்' வரி சட்டமூலம் திருத்தப்படவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அரசமைப்புச் சட்டத்தின் விதி 2 பிரிவு 1 இற்கு 'வற்' வரி சட்டமூலம் முரண்படுகிறது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாக சபாநாயகர் மேலும் அறிவித்தார்.

இச்சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பை சபாநாயகருக்கு அனுப்பியிருந்தது. அத்தீர்ப்பை சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

சட்டமூலத்தின் 20 ஆவது விதியின் 6 ஆவது பிரிவு மீளாய்வு செய்யப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இப்பிரிவுக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டால் வரி சட்டமூலம் அரசமைப்புச் சட்டத்திற்கு முரண்படாது என்றும் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது.

சட்டமா அதிபர் சட்டமூலத்தில் இத்திருத்தங்களைச் செய்ய இணங்கியிருக்கிறார் என்றும் சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

புதிய 'வற்' வரிகள் ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் என அரசாங்கம் அறிவித்திருக்கிறது.(ம-3)

### நுரைச்சோலை மக்கள் நிராகரித்த

## நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை திருமலையில் நிறுவ அரசு தீர்மானம்

இலங்கையின் முதலாவது நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் திருகோணமலையில் நிறுவப்படும். அமைச்சரவை இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டது. மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரிய சமர்ப்பித்த அமைச்சரவை அறிக்கையை ஆராய்ந்ததை அடுத்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தினந்தோறும் அதிகரித்துச் செல்லும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய நிலக்கரி மின்உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்படும் அவசியத்தை அறிக்கையில் அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார்.

அமைச்சரவைத் தீர்மானத்தின்படி திருகோணமலை கிளப்பன் பேர்க்கில இந்நிலையத்தை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மின்சக்தி - எரிசக்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

300 மெகாவோட் திறன் கொண்ட இந்த மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்குத் தனியார்துறையின் பங்களிப்பையும் அமைச்சு பெறவிருக்கிறது.

நிலக்கரி மின்உற்பத்தி நிலையம் ஒன்றை புத்தளம் நுரைச்சோலையில் முன்னர் நிறுவ அரசு திட்டமிட்டதும் - அப்பகுதி பொதுமக்களினதும் பொது அமைப்புகளினதும் கடும் எதிர்ப்பை அடுத்து அத்திட்டம் கைவிடப்பட்டதும் தெரிந்தவையே.

### கதிர்காம உற்சவம் நேற்று ஆரம்பம்

கொழும்பு,ஜூலை11

கதிர்காம உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்த உற்சவத்தை முன்னிட்டு ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடியிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து பெருந்தொகையான மக்கள் கால்நடையாக கதிர்காமத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுவதால் கடந்த 15 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தடவையாக மக்கள் பாதயாத்திரை மேற்கொள்கின்றார்கள். (ம-3)

### அசம்பாவிதம் காரணமாக

## வீதி அபிவிருத்திப் பணிகள் நானாட்டானில் ஸ்தம்பிதம்!

மன்னார் நானாட்டானில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதம் காரணமாக அப்பகுதியில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுவரும் 'நியாப்' வேலைத்திட்டங்கள் யாவும் இடைநிறுத்தம் செய்யப்பட்டன.

நானாட்டானில் நடைபெற்ற ஹர்த்தாலின்போதே அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது. கடமையின் நிமித்தம் அப்பகுதிக்குச் சென்ற வீதி அபிவிருத்தித்திணைக்கள அதிகாரிகள் பயமுறுத்தலுக்கு உள்ளாகினர். அவர்களது வாகனமும் தாக்கி முற்றாகச் சேதப்படுத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

சம்பவதினம் ஹர்த்தால் நடப்பதை அறிந்திராத மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தித்திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளரும், இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும், ஒப்பந்தகார பிரதிநிதி ஒருவரும் கடமையின் நிமித்தம் வாகனத்தில் அப்பகுதிக்குச் சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனத்தை இடைமறித்தனர். திணைக்கள அதிகாரிகள் நிலைமையை எடுத்துவிளக்கினர். தொடர்ந்து செல்லாமல் திரும்பிப் போகப்போவதாகக் கூறினர்.

ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களை அசையவிடவில்லை. வாகனம் திரும்பிச் செல்வதையும் அவர்கள் அனுமதிக்கவில்லை.

இறுதியில் வாகனம் தாக்கிச் சேதமாக்கப்பட்டது. உள்ளிருந்தோர் மயிரிழையில் உயிர்தப்பினர்.

கடமையின்போது நடைபெற்ற இச்சம்பவத்தைக் கண்டித்து பொறியியலாளரும் ஏனைய உத்தியோகத்தர்களும் அப்பகுதிக்குச் செல்வதில்லை என்று தீர்மானித்திருக்கின்றனர். தமது உயிருக்கு உத்தரவாதம் இல்லை எனவும் இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இரு வாரங்களுக்குள் தகுந்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நானாட்டான் உட்பட மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்படும் எனவும் நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்திருக்கிறார்.

## பங்கருக்குள் வைத்த கதவுகள் பல வருடங்களின் பின்னர் மீட்பு

### சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி,ஜூலை11

1990ஆம் ஆண்டு 'பங்கர்' ஒன்றுக்குள் மறைத்து வைத்து விட்டுச் சென்ற 9 ஜோடி புதுக் கதவுகளையும் பல வருடங்களின் பின்னர் தற்போது ஒருவர் மீட்டுள்ளார்.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

12 வருடங்களின் முன்னர் புது வீடு கட்டிக்கொண்டிருந்தபோது இடம்பெயர நேரிட்டதாகவும் -

அப்போது தனது வீட்டுக்காக வாங்கி வைத்திருந்த 9 சோடி கதவுகளையும் அங்கிருந்த பங்கருக்குள் வைத்து மறைத்து விட்டுச் சென்றதாகவும் -

கதவுகளுக்கு உரிமையாளரான வீ.எம்.நஜீப் என்பவர் தெரிவித்தார்.

பல வருடங்களின் பின்னர் கடந்த வாரம் தனது காணிக்குவந்து பார்த்த வீ.எம்.நஜீப், பங்கருக்குள் வைத்த கதவுகளையும் மீட்டுள்ளார். பழுதடையாத நல்ல நிலையில் மீட்கப்பட்ட அந்தக் கதவுகளை அயலவர் ஒருவரின் வீட்டில் அவர் வைத்துள்ளார்.

கதவுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த காணிக்குள் பல குடும்பங்கள் அடுத்தடுத்து கடந்த காலத்தில் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-117)

## 'டெங்கு' தடுப்பு நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் தீவிரம்!

யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சல் பரவும் அறிகுறிகள் தென்படுவதால் அதனைத் தடுக்கும் முன்முயற்சிகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தத்தம் பகுதிகளில் சுகாதார செயற்பாடுகளை மேற்கொள்ள பாடசாலைகள், சனசமூகநிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளனர்.

பாடசாலைகள்தோறும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட உள்ளன.

வீடுகள் மற்றும் பொது இடங்களில் தென்னஞ்சிரட்டைகள், கோப்பைகள், வெற்றுத்தகரப் பேணிகள் போன்றவற்றில் நீர்தேங்கிநின்று நுளம்புகள் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் சிரமதானம் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலைகளையும் அதனைச் சூழவுள்ள இடங்களையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல், மாணவர்கள் தமது வீடுகளைத் துப்புரவாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்தல், இது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தல் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், தொண்டர்கள், பொதுநிறுவனங்களைச் சேர்ந்தோர் போன்றோரின் உதவியுடன் டெங்கு தடுப்புப் பற்றிய பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட உள்ளனர். (ஒ-152)

## பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றோர்க்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்மாவட்டத்தில் பணியாற்றுவதற்கென தெரிவு செய்யப்பட்ட 82 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் அவர்களுடைய சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா அறிவித்துள்ளார். எனவே இவர்கள் நாளை வெள்ளிக்கிழமை மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு சமுகமளிக்க வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் 12 ஆம் திகதி மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

### இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்பிரதேச செயலர் பிரிவின்கீழ் 3 ஆம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களாக தொழிற்பயிற்சியினைப் பெற்றவர்களுக்கான சான்றிதழுக்குரிய இறுதிப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பயிற்சி நிலையத்துக்கு அண்மையிலுள்ள சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது என்று யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# கிழக்குக் கலவரம் குறித்து நாடாளுமன்றில் அமளிதுமளி!

கொழும்பு,ஜூலை11

கிழக்கு மாகாணத்தில் பிரச்சினைகள் ஓய்ந்துவிட்டபோதும் நாடாளுமன்றத்தில் அது கொழுந்துவிட்டு எரிந்தது. எதிரணி உறுப்பினர்களுக்கும் ஆளும் தரப்பினருக்கும் இடையில் பலத்த கருத்து மோதல், ஜே.வி.பி உறுப்பினர்கள் வழமைபோல் பதாகைகளுடன் சபா மண்டபத்தின் மத்தியில் இறங்கி ஆர்ப்பாட்டம். சபையில் அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்க்வில்லை. இதனால் சபை சுமார் 20 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு வழமைபோல் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடியது.

முதலில் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்குப் பதில்கள் அளிக்கப்பட்டன. பின் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகரின் அனுமதியுடன் கிழக்கு மாகாண அசம்பாவிதங்கள் தொடர்பான கவன ஈர்ப்பு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசினார்.

கிழக்கு மாகாணத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டபோது அரசாங்கம் அங்கு அமைதியை ஏற்படுத்தாதுவிட்டது. படையினர் அசம்பாவிதங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். பதற்றத்தைத் தணிப்ப தற்கு அரசாங்கம் படையினருக்கு உத்தரவுகளை வழங்கத் தவறிவிட்டது; படையினரைக் கட்டிப்போட்டுவிட்டது. இதனாலேயே கிழக்கு மாகாணத்தில் பாரிய உயிர் இழப்புக்களும் பொருளசேதங்களும் ஏற்பட்டன. இனிமேலும் இப்படியான நிலைமை ஏற்படக்கூடாது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். உடைமைகளை இழந்து அநாதரவாக இருக்கும் அனைவருக்கும் அரசாங்கம் பாரபட்சமின்றி நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று கோரிக்கைவிடுத்து தனது பேச்சை முடித்துக் கொண்டார் அவர்.

அடுத்து ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி நிதி அமைச்சரை உற்பத்தி வரிகள் திருத்தச் சட்டத்தை சமர்ப்பிக்கும்படி சபாநாயகர் அழைத்தார்.

அதேவேளை, ஜே.வி.பி.உறுப்பினர் விமல் வீரவன்ஸ எழுந்து எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கைக்கு அரசாங்கம் பதில் அளிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

'ஆனால், இது நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு முரணானது. எந்தக் கட்சித் தலைவரும் நாட்டின் நலன் கருதி அறிக்கை சமர்ப்பிக்க முடியும். ஒன்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது இரண்டாவது அரசாங்கத்திடம் இருந்து பதிலைக் கோருவது.

இன்று எதிர்க்கட்சித் தலைவர் அரசின் கவன ஈர்ப்புப் பிரேரணையைத்தான் சமர்ப்பித்துள்ளார். அதற்குப் பதில் கேட்கவில்லை. எனவே, பதில் அளிக்கவேண்டிய அவசியம் இல்லை எனக் கூறிய சபாநாயகர், நிதி அமைச்சர் சட்டவரைபுகளை சமர்ப்பிக்கலாம்' என்று கூறினார்.

ஆனால், ஜே.வி.பியினர் அதற்கு இடம்கொடுக்கவில்லை. மறைத்து வைத்திருந்த போஸ்டர்களையும், பதாகைகளையும் தூக்கிப்பிடித்துக் கொணடு கூச்சல் போட்டனர். இந்தக கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் எழுந்து ஏதோ கூறமுற்பட்டார். கூச்சல் மத்தியில் அவரது குரல் எடுபடவில்லை. தமது ஆசனங்களில் இருந்து கூச்சல் போட்ட ஜே.வி.பியினர் பதாகைகளை ஏந்திப் பிடித்தவாறு சபா மண்டபத்தின் நடுப்பகுதிக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். ஜே.வி.பியினரைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் சிலரும் பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

☆ ரணில் - பிரபா உடன்படிக்கை இதுதானா?

☆ கிழக்கு மாகாண மக்களை அரசாங்கம் புலிகளிடம் காட்டிக் கொடுத்துவிட்டது!

☆ கிழக்கு மாகாணத்தில் புலிகளை ஏவி முஸ்லிம்களை அழிக்கிறது அரசு!

☆ தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து!

- போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியபடி சபை நடுவில் கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தியதோடு சபா பீடத்தை நோக்கி வந்தனர் எதிர்க்கட்சியினர். படைக்கல சேவிதரும், சபை ஊழியர்களும் அவர்கள் சபாபீடத்தை எட்ட விடாமல் பாதுகாத்தனர்.

எனினும், சபையில் அமைதி ஏற்படவில்லை. எதிரணியினருக்கும், ஆளும் தரப்பினருக்கும் இடையில் பலத்த சொற்போர் தொடர்ந்தது. அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. எனவே சபையை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

20 நிமிடங்களின்பின் 11 மணிக்கு மீண்டும் சபை கூடியது. இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கப்பல், துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

"சபையில் கூச்சலும் குழப்பமும் இடம்பெற்றபோது முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரதமருடன் கிழக்கு மாகாணச் சம்பவங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்திக்கொண்டிருந்தோம். ஆனால் கூச்சலும் குழப்பமும் அதிகரிக்கவே சபைக்குள் அவசரமாக வந்தோம். எதிர்க்கட்சித் தலைவர் எனது பெயரைச் சில இடங்களில் குறிப்பிட்டார். அதனாலேயேதான் எனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க எழுந்தேன். அதற்கு இடமளிக்கப்படவில்லை. எனினும் அவ்வேளையில் எனது ஒலிவாங்கி இயங்காத காரணத்தால் நான் பேசியது தெளிவாகக் கேட்கவில்லை" என ஹக்கீம் கூறினார்.

"சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னர் இவ்விடயம் தொடர்பாகப் பிரதமருடன் பேசினோம். எம்முடன் பேசிய பின், சபையில் தெளிவான பதில் ஒன்று அரசினால் அளிக்கப்படும் எனப் பிரதமர் உறுதி அளித்துள்ளார். அதனை ஏற்றுக்கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேசியதைத் தொடர்ந்து தமிழர் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் இரா.சம்பந்தன் பேசினார்.

"கிழக்கு மாகாண அசம்பாவிதங்கள் தொடர்பாகத் தனிப்பட்ட முறையில் முஸ்லிம் காங்கிரஸுடன் மட்டும் பேச்சுக்களை நடத்தியபின் அரசாங்கம் பதில் அளிக்க முற்படக் கூடாது. வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துத்துவப்படுத்தும் பிரதான கட்சி என்ற வகையில் பிரதமர் தமிழ தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சு நடத்திய பின்னரே உண்மையான நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும்" என அவர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, ஜே.வி.பி.உறுப்பினர்கள் தாங்களும் பேசவேண்டும் என எழுந்தபோதும் அதற்கு இடம் அளிக்கப்படவில்லை. இதனால் மீண்டும் சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. அப்போது பாதுகாப்பு அமைசசர் திலக் மாரப்பன இவ்விடயம் தொடர்பாக அரச தரப்பில் விரிவான பதில் அளிக்கப்படும் எனக் கூறிப்பிரசினைக்கு [illegible] புள்ளி வைத்தார்.


நாடாளுமன்றத்திலிருந்து...

# புலிகளை முழுமையாக நம்புகின்றோம் நாம்!

## முஸ்லிம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை11

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. ஈழத் தமிழ மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற வகையில் இனிமேல் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்களால் அங்கு வாழும் முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படாது என அவர்கள் உறுதியளித்துள்ளனர். அவர்களின் பேச்சில் எமக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

- இப்படி கூறினார் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மயோன முஸ்தபா.

நேற்றுமுன்தினம் 'பற்று' வரிகள் தொடர்பான விவாதம் நடைபெற்ற போது பேசிய மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான மயோன் முஸ்தபா அங்கு மேலும் கூறியதாவது:-

"ஜே.வி.பியினர் இந்தச் சபையில் பொறுப்பற்ற வகையில் நடந்துகொளகின்றனர். அவர்களுக்கு நாட்டில் அமைதி ஏற்படுவதில் அக்கறை இல்லை.

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற சம்பவங்கள் கறைபடிந்த வரலாறாகிவிட்டது. இனிமேல் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் பார்க்கவேண்டும்.

அமைச்சர்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் புலிகளுடன் சென்று பேசினோம். அதேபோன்று முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் புலிகளுடன் பேசினார்கள்.

அப்போது இரு பக்கத்திலும் காணப்பட்ட தவறுகள், குறைபாடுகள், அசம்பாவிதங்கள் தொடர்பாகக் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

அனைத்துத் தமிழர்களும் புலிகளை ஏகத் தலைமையாகவும் ஏகப் பிரதிநிதிகளாவும் அங்கீகரித்துள்ளனர்.

இந்த வகையில் இப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்குப் புலிகள் உத்தரவாதம் அளிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம். இதற்கான உறுதியைப புலிகள் வழங்கியுள்ளனர். அவர்களுடைய பேச்சில் எமக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நாம் அனைவரும் சமாதானத்தையும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வையும் காண்பதில் ஆர்வமாக இருக்கின்றோம். சிறுசிறு இடையூறுகள் சமாதானப் பேச்சுக்களுக்குத் தடையாகவோ, முட்டுக்கட்டையாகவோ அமைந்து விடக்கூடாது. அதற்கு நாம் துணைபோகவும் கூடாது.

அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையில் ஓரணியில் கூடியுள்ளன.

ஆனால், முஸ்லிம்களாகிய நாம் பல பிரிவுகளாகப் பிரிந்து சிதைந்து போய் இருக்கின்றோம்.

இந்த நிலை மாறவேண்டும். அனைத்து முஸ்லிம்களும் தேசிய ரீதியாக வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடவேண்டும். அப்போதுதான் முஸ்லிம்களுக்கு விமோசனம் ஏற்படும் - என்றார் அவர்.

(ஒ)

# அரசின் சமாதான ஆர்வம் திசை திரும்பிவிட்டதா?

## சிவாஜிலிங்கம் எம்.பி. கேள்வி

கொழும்பு,ஜூலை11

சமாதான முயற்சிகளில் அரசின் ஆர்வம் குறைந்துவிட்டதா? அல்லது திசை திரும்பிவிட்டா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான நடவடிக்கையில் முன்பு பெரிதும் ஆர்வம் காட்டிச் செயற்பட்டுவந்தார். ஆனால், படிப்படியாக இந்த வேகம் குறைந்துவிட்டது. அவருடைய கவனம் வேறு பக்கம் திசை திரும்பிவிட்டதோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு யாழ்.மாவட்ட எம்.பி.யான சிவாஜிலிங்கம் நேற்றுமுன்தினம நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

'பற்று' வரி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய சிவாஜிலிங்கம் எம்.பி.மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரதும் கடற்படையினரதும் அடாவடித்தனங்கள் கட்டுமீறி உள்ளன. தீவகப் பகுதியில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கடற்படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

சமாதானம், யுத்தநிறுத்தம் என்று கூறிக்கொண்டு அரசாங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இராணுவ பலத்தை அதிகரித்து வருகின்றது. எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அரசின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

முன்னைய அரசின் காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதே போன்றுதான் சமாதானம் என்று ஆரம்பித்து அதைக் கைவிட்டுவிட்டார். அதே நிலைமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளுக்கும் ஏற்படக் கூடாது - என்றார்.

(ஒ)

# ஒப்பந்தத்துக்குப் பின்னரும்கூட வடக்கில் மக்கள் ஒப்பாரிதான்!

## ரவிராஜ் எம்.பி. கூறுகின்றார்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டு இராணுவம் புதிய பாதைகளை அமைக்கின்றது. வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு பெறுமதிமிக்க கதவுகள் முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. புரிந்துணர்வு மற்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பின்னர் எமது மக்கள் அமைதி இழந்தே வாழ்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ரவிராஜ் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

'பற்று' வரி தொடர்பான விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேல் யுத்தக் கொடுமையினால் இந்த நாட்டின் பொருளாதாரம் குட்டிச்சுவராக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் மீண்டும் கட்டிக்காக்கப்பட வேண்டுமானால் உடனடியாக யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.

இராணுவ முகாம்களை அமைப்பதற்காகப் பல்லாயிரம் பனை, தென்னை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. விவசாயிகள் தமது காணிகளில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. எமது மக்கள் வறுமையினால் வாடுகின்றனர்.

தென்பகுதியில் இருந்து பல அமைச்சர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு தமது கோஷ்டியினருடன் வந்து போகின்றனர். அமைச்சர்களின் வடபகுதி விஜயத்தால் எமது மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

அங்கு வரும் அமைச்சர்களிடம் எமது மக்கள் நிவாரணம் கேட்டால் அரசிடம் நிதி இல்லை என்று அவர்கள் பதில் கூறுகின்றனர்.

நிதி இல்லை என்று கூறுவதற்காகப் பல லட்சம் ரூபாவைச் செலவிட்டுத் தமது பரிவாரங்களுடன் அமைச்சர்கள் அங்கு நேரில்வர வேண்டுமா? அவசியம் இல்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும் - என ரவிராஜ் கூறினார்.

(ஒ)

# 'வற்' வரிகள் முறையால் மக்களுக்கு நன்மை

அரசு அறிமுகப்படுத்தி உள்ள 'பற்று' வரி (வற் வரி) முறையினால் நாட்டு மக்களுக்குப் பல்வேறு நன்மைகள் ஏற்படுத்தப்படும். வாழ்க்கைச் செலவு குறையும். உள்ளூர் உற்பத்தியும் விவசாயமும் மேலும் ஊக்குவிக்கப்படும்.

நிதி அமைச்சர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இப்படி உறுதி அளித்தார்.

இவை தொடர்பாக விளக்கம் அளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

இந்தியாவுடன் வர்த்தக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பயனாக பல பொருள்களுக்கான தீர்வை வரிகள் நீக்கப்பட்டுள்ளன. மேலும் 90 வீதமான பொருள்களுக்கான தீர்வைகள் மறுசீரமைக்கப்படவுள்ளன. விவசாய உபகரணங்களும், கல்வி அபிவிருத்திக்குமான வரிகள் நீக்கப்படும். மூலப் பொருள்களுக்கான வரிகளும் ஆடைத் தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருள்களுக்கான தீர்வைகளும் குறைக்கப்படும்.

இதே அடிப்படையில் அடுத்த மாதம் முதல் டீசல், பெற்றோல் மற்றும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படும் போது நாட்டு மக்களுக்கு மேலும் பல நன்மைகள் கிடைக்கும் எனவும் நிதி அமைசசர் கூறினார்.

# யாழ்.மாவட்ட மாணவர்க்கு இலவச மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம்ஜூலை11

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களைச் சார்ந்த கண் பார்வை குறைந்த பாடசாலை மாண வர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் வாழ்க்கைத் தொழில்சார் கூட்டமைப்பு நிறுவனம் இவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளை வழங்க முன்வந்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இக்கண்ணாடி வழங்குவதற்கான பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் உள்ள கண் பார்வை குறைந்த மாணவர்களை இந்த முகாமுக்கு அதிபர்கள் தவறாது அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா கேட்டுள்ளார்.

(ஒ-8-10)

## ஆன்மீகச் சொற்பொழிவு

ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமாரின் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சுழிபுரம் வடகிழக்கு சம்புநாதேஸ்வர அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 'மனித வாழ்வும் ஒழுக்க நெறிகளும்' என்னும் விடயம் பற்றி தினமும் பல்வேறு இடங்களில் சுவாமிகள் சொற்பொழிவு செய்து வருகின்றார். மாதந்தோறும் சுவாமிகளின் சொற்பொழிவை அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடத்த ஆலய பரிபாலன சபையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (ஒ-8-28)


## விற்பனைக்கு

EURO STAR, 8' ORIGINAL (KOREA)
DISH ANTENNAக்கள்
DIAMOND 8', 10' (INDIAN)
DISH ANTENNAக்கள்
DIGITAL RECEIVER, LNBF, LNB
போன்றவையும் தனித்தனியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
DIGITAL DISH SET
ரூபா 30000/= இலிருந்து.

அருண் வீடியோ மூவி
பிரதான வீதி, நெல்லியடி.
TEL: 021-3217, 070-212801 (5836)


## நிலைத்து நின்று வாழ்க



திரு.சுப்பிரமணியம் யோகராஜா
[B.A.,DIP.IN EDU.,TR.]
இருவர் நியமனத்திற்காய்
இரவு பகல் பாராதுழைத்து
எம் வாழ்வை வளம்படுத்திய
இனியவரே நீடூழி வாழ்க!

திரு.ந.முரளீதரன்,
ச.யுகபாலா.
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். (5839)

வரலாற்றுச் சாதனைபடைத்த
வலைப்பந்தாட்ட அணிகளை
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியன்களான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின்

17 வயது பிரிவு
19 வயது பிரிவு

வலைப்பந்தாட்ட அணிகள் ஒரே பாடசாலையின் இரு அணிகள் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டு வரலாற்றுச் சாதனை படைத்துள்ளன. இந்த அணிகளின் வீராங்கனைகளையும் பயிற்றுநரையும், ஆசிரியர்களையும், வழிகாட்டிய அதிபரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றோம்.

செயலாளர், - பழைய மாணவர் சங்கம்,
ப.மா.ச. (5840) யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை நவரத்தினம்

தாவடியைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடா மிசிசாகாவில் வசித்து வந்தவருமான, முன்னாள் பிரபல வர்த்தகர் செல்லத்துரை நவரத்தினம் அவர்கள்(07.07.2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சரஸ்வதி தம்பதிகளின் அருமை மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கனடாவில் வசிப்பவர்களான கலாறஞ்சினி, பாஸ்கரன், நகுலேஸ்வரன், கலாறஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைகுந்தநாதர், கலாவதி, ரமணி, சர்வானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மாணிக்கவாசகர், மகாலிங்கம் மற்றும் இலங்கையில் வசிப்பவர்களான அருளம்பலம், பஞ்சலிங்கம், சொர்ணபுஷ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசதாசன்(இலங்கை), சிவதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சுஜந்தன், திஷியந்தன், பிரவீன், பிரணவன், நிஷானி, கஜானி, நிஷானி, கஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.07.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு கனடா சென்ஜோன்ஸ் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசடி வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில். (5828)

தகவல்:
கணேசதாசன்
(மைத்துனர்).


## ACE INTERNATIONAL RECRUITMENT CONSULTANTS (PVT.) LTD.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட ACE INTERNATIONAL நிறுவனத்தில் அரபு நாடுகளுக்கான பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.

| தொழில் | சம்பளம் (DHSஇல்) |
|---|---|
| SHUTTERING CARPENTER (பலகை அடிப்பவர்) | 900-1100 |
| FURNITURE CARPENTER (தச்சுத்தொழிலாளி) | 800-1000 |
| FABRICATOR (கம்பி கட்டுபவர்) | 1000-1300 |
| WELDER (வெல்டர்) | 900-1100 |
| IND. ELECTRICIAN (தொழிற்சாலை மின் இணைப்பாளர்) | 900 |
| SAND BLASTER (இரும்பு சுத்திகரிப்பவர்) | 900 |
| PLAMBERS (பிளம்பர்) | 900 |
| STEEL FIXER (உருக்கு இணைப்பவர்) | 800 |
| PIPE FITTER (குழாய் இணைப்பவர்) | 900 |
| DRIVER (சாரதி, அரபுநாட்டு சாரதி அனுமதிப்பத்திரத்துடன்) | 1350 |
| PAINTER (SPRAY) (பெயின்ரர் - ஸ்பிறே) | 700-900 |
| LAUNDRY MAN (சலவைத் தொழிலாளி) | 750 |
| REFRIGERATION MECHANIC (குளிர்சாதனைப் பெட்டி திருத்துபவர்) | 1200 |
| VAN DRIVER (வான் சாரதி - அரபுநாட்டு சாரதி அனுமதிப் பத்திரத்துடன்) | 1200 |
| WAITER (வெயிற்றர்) | 750 |
| KITCHEN BOY (சமையல் உதவியாளர்) | 650 |
| SALES GIRLS (SUPER MARKET) (பெண் விற்பனை உதவியாளர்) | 1000 |
| HOSTESS (பெண் பணிவிடையாள்) | 1000 |
| WAITRESS (பெண் உணவுவிடுதி உதவியாளர்) | 1000 |

★ 4 "பாஸ்போட்" அளவு புகைப்படம், சான்றிதழ்களுடன் தொடர்புகொள்ளவும்.

**ACE INTERNATIONAL**
இல.08, நவீன சந்தை,
மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2405.

பதிவுக் கட்டணம்: ரூ. 200/- (5831)




உ
சிவமயம்

## உபநயன வைபவ அழைப்பும் திருமண வரவேற்புபசாரமும்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனிமாதம் 27ஆம் நாள் இன்று (11.07.2002) வியாழக்கிழமை காலை 10.36 மணிமுதல் நண்பகல் 12.20 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எமது துவிதிய புத்திரன்

சிரஞ்சீவி கஜேந்திரசர்மா அவர்களுக்கு

நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் அந்தணப் பெரியோர்களால் பிரம்மோபதேசம் நிகழ்த்தப்பெற்று வரவேற்புபசாரமும் நடைபெறும்.

இன்று மாலை 5.00 மணிக்கு

திருவாளர் பிரம்மஸ்ரீ

### தியாகராஜ வித்தியானந்தசர்மா - யசோதராம்பாள்

புதுமணமக்களின் திருமாங்கல்யதாரண வரவேற்புபசாரம் நடைபெறும். மேற்படி வைபவங்களில் எமது அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் கலந்து குடும்ப சமேதராய் வருகைதந்து உபநயனச் செல்வனையும் எமது ஜ்யேஷ்ட புத்திரி திருமணத்தம்பதியினரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்குமவண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.19, பிறவுண் வீதி,
இரண்டாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (5826)

வரவேற்பாளர்கள்:
திருவாளர் பிரம்மஸ்ரீ சோமவரதராஜக் குருக்கள் தம்பதிகள்,
திருவாளர் பிரம்மஸ்ரீ சோமசுபேசசர்மா தம்பதிகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## SHOTOKAN KARATE MARTIAL ARTS ACADEMY



மேற்குறிப்பிட்ட கழகத்தின் இயக்குநரும் போதனாசிரியருமான சென்செய் :- ஆர். விஜயபாஸ்கர் (கறுப்புப் பட்டி) அவர்களினால் கழக மாணவர்களுக்கு கறுப்புப்பட்டி 07.07.2002 அன்று வழங்கப்பட்டது.

மேலுள்ள படத்தில் வலம் இருந்து இடமாக எஸ்.மயூரன், கே.அன்ரன் ஜேசுராசா, எம்.ஜெனோல்ட், சென்செய். ஆர். விஜயபாஸ்கர் (கழக இயக்குநரும் போதனாசிரியரும்), கழக ஆசிரியர் ஆர்.இராஜசேகர், எஸ்.சுகிர்தராஜ், ஆர்.நிரோஷானந் ஆகியோர் உள்ளனர்.

இவர்களில் சிரேஷ்ட மாணவர்கள் கறுப்புப்பட்டி பெற்றமைக்காகப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்த யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திருவாளர் V. மாணிக்கம் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

408, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கராத்தே மாணவர்கள்
S.K.M.A., யாழ்ப்பாணம்.

உதயன்

# இணைந்து செயற்படுவது இருதரப்புக்கும் நல்லது

"அமைதிநிலை ஏற்படுவதை விரும்பாத சில சக்திகள் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே - தலைவர்களிடையே பூசலை உருவாக்கி அதன்மூலம் குளிர்காய விரும்புகின்றன. அதற்கு இடங்கொடுக்காமல் துணிச்சலுடனும் தூரதிருஷ்டியுடனும் செயற்பட வேண்டிய பாரியபொறுப்பு தமிழ், முஸ்லிம், மலையகத் தலைவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. துணிச்சலான செயற்பாடுகள், நடவடிக்கைகள் மூலம் தங்களின் சமூகப் பொறுப்பை வெளிப்படுத்துவார்களா அவர்கள்?"

- இவ்வாறு இதே பத்தியில் நேற்றுக் கேள்வி எழுப்பியிருந்தோம். அதை எழுதிய மை காய்வதற்கு முன்னரே தமிழ் - முஸ்லிம் தலைவர்களிடையே கருத்துவேறுபாட்டை - முரண்பாட்டை - உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சக்திகளுக்கு கணிசமான வெற்றி கிட்டியிருப்பது பற்றிய செய்தி வெளியாகியுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை பி.பி.ஸி. தமிழ்ச் சேவைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வழங்கிய செவ்விதான் இந்த விடயத்தை அம்பலப்படுத்துகின்றது.

இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் தாம் என்பதை நிரூபித்துள்ளவர்கள் விடுதலைப் புலிகள்.

அதேபோன்று முஸ்லிம்கள் மத்தியில் அதிக ஆதரவைப் பெற்ற அரசியல் சக்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

இந்த இருதரப்புகளுக்கும் இடையிலான முரண்பாடு தமிழர் - முஸ்லிம் பிணக்காகக் கருதப்படக் கூடியது; கருதப்படவேண்டியது.

பி.பி.ஸி.பேட்டியில் புலிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஹக்கீம் அடுக்கியிருக்கின்றார். அவரது பேட்டியில் இரண்டு அம்சங்கள் நோக்கப்பட வேண்டியவை.

ஒன்று - புலிகள் இந்தப் போராட்டத்தை முஸ்லிம்களுக்காகவும் நடத்துகின்றார்கள் என்பதை நிரூபிக்கத் தவறியிருக்கின்றார்கள் என்பது.

மற்றையது - தமிழ்மக்களும் புலிகளுக்கு வரி செலுத்துகின்றார்கள். புலிகளின் போராட்டத்தை ஆதரிக்கவேண்டிய தார்மீகக் கடப்பாடு அவர்களுக்கு உண்டு. ஆனால், புலிகள் முஸ்லிம்களுக்காகவும் இந்தப் போராட்டத்தை நடத்துகின்றார்கள் என்பதை நிரூபிக்கத் தவறியிருப்பதால் அந்தப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டிய கடப்பாடு - பொறுப்பு - முஸ்லிம்களுக்கு இல்லை என்பது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இந்தக் கருத்துக்கள் முற்றிலும் சரியானவையே. அதுவும் முஸ்லிம்களுக்காகவும் இந்தப் போராட்டத்தை தாம் நடத்துகின்றார்கள் என்பதைப் புலிகள் நிரூபிக்கத் தவறிவிட்டார்கள் என ஹக்கீம் கூறுவதில் நிறைய அர்த்தங்கள் பொதிந்துள்ளன.

ஆனால், இத்தகைய கருத்தை மட்டும் கூறிக்கொண்டு, முஸ்லிம்களைத் தனியாகப் பிரித்து வைத்துக்கொண்டு, சுயாதீனமாகச் செயற்பட ஹக்கீம் முயற்சிப்பது நியாயமா? அது முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் ஒட்டுமொத்த நலனுக்கு உகந்ததா என்பதெல்லாம் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டியவை.

ஒரு போராட்ட சூழலில் - அதுவும் பெரும் யுத்தம் வெடித்த ஆயுதப்போராட்ட சூழலில் - சில மட்டுப்படுத்தல்கள், கட்டுப்பாடுகள், தடைகள், ஒழுங்குமீறிய செயல்கள் - தவிர்க்கமுடியாதவை. என்றாலும், அமைதிக்கான சமாதான முயற்சிகளின் நலன்கருதி சம்பந்தப்பட்ட தரப்புகள் அத்தகைய செயல்களைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

அதேசமயம், தமிழரின் விடுதலைப் போராட்டம் நடைபெறும் அவர்களது தாயகத்திலே மொழியாலும், வாழ்க்கை முறையாலும் ஒன்றிணைந்து, உணர்வும், உயிருமாய்ப் பின்னிப்பிணைந்து நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்துவரும் முஸ்லிம்கள் அந்தப் போராட்டத்திலிருந்து விலகிநிற்க முடியாது; தள்ளிநிற்க இயலாது; தள்ளிநிற்கக் கூடாது.

இருதரப்புப் போராட்டத்துக்கு மத்தியில், தாம் இணைந்து வாழ்ந்த இனத்தை விட்டுப்பிரிந்து நின்று - ஒதுங்கி நின்று - இருதரப்புக்கும் மத்தியில் லாபம் ஈட்ட முயலும் உத்தி எப்போதும் பலன் தரும் எனச் சிந்திக்கக் கூடாது.

அடக்கப்பட்ட - அடிமைப்படுத்தப்பட்ட - மக்கள் ஒன்றிணைவதே அடக்குமுறையைத் தடுக்க வழிசெய்யும்!

## ஜனாதிபதியின் ஆலோசகராக

# அநுரா ஏற்றுள்ள பதவி குறித்துச் சட்டச்சர்ச்சை

கொழும்பு,ஜூலை11

நாடாளுமன்ற உறுப்பினரான அநுரா பண்டாரநாயக்க ஜனாதிபதியின் தேசிய ஒருங்கிணைப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டிருப்பது சட்டரீதியானதா என்பது தொடர்பாக சந்தேகம் எழும்பியுள்ளது. இந்த நியமனத்தின் சட்டவலுக் குறித்து அமைச்சர்கள் சிலர் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பவிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி தனது அலுவலக அதிகாரி ஒருவரை நியமிக்கும் பொழுது, அமைச்சரவையின் கருத்தை அறியவேண்டும் என்று அரசமைப்புச் சட்டவிதி ஒன்று குறிப்பிடுகின்றது. ஆயினும் அநுரா பண்டாரநாயக்காவின் நியமனம் குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்படவில்லை என்று காணியமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசகர் பதவிக்காக அநுரா சம்பளம் பெறாவிடினும் அது அரச அதிகாரி பதவியாகவே கருதப்படுகிறது. அகவே, அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க வேண்டிவரும் என்றும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.(ஒ)

## குழந்தைக்குப் பொருத்தப்பட்டிருந்த

# 'ஒட்ஸிசன் சிலிண்டர்' வெடித்ததில் தமிழ்த் தாயும் இரு பிள்ளைகளும் பலி!

## ஜேர்மனியில் பரிதாபச் சம்பவம்

லண்டன்,ஜூலை11

பச்சிளம் குழந்தையின் சுவாசத்துக்காகப் பொருத்தப்பட்டிருந்த 'ஒட்ஸிசன் சிலிண்டர்' வெடித்துச் சிதறியதில் தமிழ்த் தாய் ஒருவரும் அவரது இரு குழந்தைகளும் உயிரிழந்தனர்.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் ஜேர்மனியில் இடம்பெற்றுள்ளது.

திருமதி பத்மினி ஜெயராசா என்பவரும் அவரது இரு குழந்தைகளுமே சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

பத்மினியின் இரண்டாவது குழநதை பிரசவ காலத்துக்கு முன்னரே பிறந்தது. இதனால் அந்தக் குழந்தையின் சீரான சுவாசத்திற்காக அதற்கு ஒட்ஸிசன் வழங்கப்பட்டு வந்தது. இதற்காக குழந்தையின் அருகில் 'ஒட்ஸிசன் சிலிண்டர்' ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

அவரது கணவர் வேலைக்குச் சென்றபின்னர் அவர் தமது இரு பிள்ளைகளுடனும் வீட்டில் இருந்ததாகவும் -

திடீரென 'ஒட்ஸிசன் சிலிண்டர்' வெடித்ததில் அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது.(ம-3-12)

## இடப்பெயர்வு காலகட்டத்தில்

# 'கௌரவத் திருட்டு'க்கு உள்ளான பொருள்களை மீட்க மக்கள் ஆர்வம்!

அச்சுவேலி,ஜூலை11

வலிகாமம் இடப்பெயர்வின் போது 'கௌரவத் திருட்டு'க்கு உள்ளான தமது பொருள்களை தற்போது வன்னி உட்பட பிற இடங்களில் இருந்து திரும்பி சொந்த இடங்களுக்கு வந்துள்ளவர்கள் அடையாளம் கண்டு மீட்டுவருவதை அவதானிக்கமுடிகிறது.

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின் போது சிலர் இங்கு தங்கியிருந்தனர். அத்துடன் 1996ஆம் ஆண்டு மீள்குடியமர்வின்போது சிலர் முதலில் திரும்பியிருந்தனர்.

இத்தகையோரில் சிலர் தமது வீடுகளின் அயல் வீடுகளிலும், இராணுவத்தினர் தங்கியிருந்த இடங்களிலும் இருந்த தளபாடங்கள், வீட்டுப்பாவனைப் பொருள்களைத் தமதாக்கினர். சில பொருள்களை விற்றுமுள்ளனர். இந்தக் 'கௌரவத் திருட்டால்' பல குடும்பங்களிடையே பிணக்குகளும் உருவாகியிருந்தன.

இந்த நிலையில் இடம்பெயர்ந்து சென்று தற்போது திரும்பியுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது பொருள்களை அடையாளம் காட்டி மீளப்பெறுவதில் ஆர்வங்காட்டிவருகின்றனர்.

இந்தவகையில் கதிரைகள், கட்டில்கள், மேசைகள் உள்ளிட்ட தளபாடங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளிட்ட வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவையே அடையாளம் காட்டி மீளப்பெறப்படுகின்றன.

அச்சுவேலிப் பகுதியில் 6ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டியை அதன் உரிமையாளர் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொண்டுள்ளார். சுமார் 30ஆயிரம் ரூபா பெறுமதியான அந்தக் குளிர்சாதனப்பெட்டி 6 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே 'கௌரவத் திருட்டு' அம்பலமானது.

'கௌரவத் திருட்டு' செய்யப்பட்ட பல பொருள்கள் உருமறைப்புச் செய்யப்பட்டிருப்பது, வெளியூர்களில் உள்ள முகவர்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டிருப்பது, சில இடங்களில் மூடிய அறைகளில் மறைத்துவைக்கப்பட்டிருப்பது தொடர்பாக உரிய இடத்தில் அப்பொருள்களின் உரிமையாளர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய முறைப்பாடுகள சிலவற்றில் உள்ளூர்ப் பிரமுகர்கள் மீதும் 'கௌரவத் திருட்டு' குற்றஞ்சாட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

# சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்ற பொலீஸ் குழு

கொழும்பு,ஜூலை11

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போரைக் கண்டுபிடித்துக் கைதுசெய்யவென விசேட பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் பணிப்பின் பேரில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பொலீஸ் குழுவிடம், சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் சம்பந்தமாகத் தமக்கு தெரிந்த தகவல்களை பொதுமக்கள் முறையிடமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-12)

# வன்னியில் 'போலித் தேன்'; காவல்துறை எச்சரிக்கை!

கிளிநொச்சி,ஜூலை11

வன்னிப் பகுதியில் சிலர் 'போலித் தேன்' விற்பதாகவும் - இது குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கும்படியும் - தமிழழ காவல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னிப் பகுதி ஊடாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பயணிக்கின்றனர். வன்னிப் பகுதியில் கிடைக்கும் சுத்தமான தேனை வாங்கிச் செல்வதில் அவர்கள் அதிக ஆர்வங்காட்டி வருகின்றனர்.

இதனைப் பயன்படுத்திச் சிலர், செயற்கையாகத் தயாரிக்கப்படும் 'போலித் தேனை' விற்றுவிடுதாக தமிழீழக் காவல் துறைக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

இதனையடுத்து 'போலித் தேனை' விற்று பொதுமக்களை ஏமாற்றக்கூடாது என தமிழீழ காவல்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் போலித் தேன் வியாபாரிகளை அடையாளம் காண்பதிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஒ)

### நாளை

ஆனி 28
வெள்ளிக்கிழமை
(12.07.2002)
திதி : துதியை
பிற்பகல் 1.27 வரை.
நட்சத்திரம்: பூசம்
காலை 7.54 வரை.
மரண யோகம்
சுபநேரம் : 5.59 - 7.29
ராகுகாலம்: 10.29 - 11.59
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

விமர்சனங்களைவிட யாரால் விமர்சிக்கப்படுகின்றோம் என்பதே முக்கியமானது.

# பற்றைக்காட்டுக்குள் கிடந்த பெண் சிசு! அயலவரால் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை11

பிறந்தவுடன் புதருக்குள் அநாதரவாக விடப்பட்டதாகக் கூறப்படும் பெண் சிசுவொன்று அப்பகுதி அயலவர்களால் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தும்பளை லூர்த்துமாதா முகாமை அண்டிய பகுதியில் இருக்கும் பற்றைக் காட்டுக்குள்ளிருந்தே இச்சிசு நேற்றுமுன்தினம் காலை மீட்கப்பட்டது.

சம்பவதினம் காலை 9.30மணிக்கு அப்பகுதிக்கு விறகு எடுக்கச்சென்ற குடும்பப்பெண் ஒருவர் சிசுவின் அழுகுரல் கேட்டு அவ்விடத்திற்குச் சென்று பார்த்ததாகவும் -

அங்கு பிறந்த கறைகளுடன் சிசுவொன்று பழைய கிடுகின் மேல் படுக்கவைக்கப்பட்டிருப்பதைக் கண்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அந்தச் சிசுவை வீட்டுக்குத் தூக்கிச் சென்ற அந்தப்பெண் இது குறித்து பருத்தித்துறைப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட பொலீஸார் சிசுவை மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டனர். ஆரோக்கியமான நிலையில் உள்ள அச்சிசு மந்திகை மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-15)

# யாழ்.மணிக்கூண்டின் கடிகாரங்கள் பழுது!

கொழும்புத்துறை,ஜூலை11

யுத்த அனர்த்தங்களால் சேதமுற்று சமீபத்தில் புனரமைக்கப்பட்ட யாழ்.மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த 4 முகப்புக் கடிகாரங்களில் மூன்று நேற்றுமுன்தினம் 3.20 மணியுடன் செயலிழந்து காணப்படுகின்றன.

மணிக்கூண்டுக் கோபுரத் திறப்புவிழா இடம்பெற்ற சில நாள்களிலேயே அதன் ஒரு கடிகாரம் செயலிழந்தது. இதனால் அந்தக் கடிகாரத்தின் இயந்திரப் பகுதி கழற்றி திருத்தவேலைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஒரு வாரத்தில் திருத்த வேலைகள் இடம்பெற்று அந்தக் கடிகாரம் இயங்கும் எனக் கூறப்பட்டபோதும் இதுவரை அந்தக் கடிகாரம் இயங்கவில்லை. இந்த நிலையில் மற்றைய 3 முகப்புக் கடிகாரங்களும் நேற்று செயலிழந்து காணப்பட்டன.

யாழ்நகரின் புகழ்பெற்ற நிலக் குறியீடாக விளங்கும் இந்த மணிக்கூண்டுக் கோபுரத்துக்கான கடிகாரங்களை பிரிட்டிஷ் அரசு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஒ-ரி)

## நிரந்தர நியமனம் வழங்க

# சமயாசமய ஊழியர்க்கு நேர்முகப் பரீட்சை

## சுகாதார அமைச்சு நடத்தும்

சண்டிலிப்பாய்,ஜூலை11

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் நீண்டகாலமாகப் பணிபுரிந்துவரும் சமயாசமய சுகாதாரத் தொழிலாளர்களுக்கும், அமைய சாதாரண தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்.சுகாதாரத் திணைக்களத்தினால் விரைவில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த பல வருடகாலமாக அமைய சுகாதாரத் தொழிலாளிகளாகவும், அமைய சாதாரண தொழிலாளிகளாகவும் கடமையாற்றி வருபவர்கள் இதன்மூலம் நன்மையடைவார்கள் என்று கூறப்படுகிறது. (ஒ-135)

# யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்



# புதிய கட்டடத் திறப்புவிழா ~ 11.07.2002

## ஆதீன முதல்வரின் அருளாசி

யாழ்ப்பாணம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் தனக்கென சொந்தமாக மூன்று மாடி கட்டடத்தைக் கட்டி இன்று திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். உரும்பிராய் கற்பக விநாயகரின் திருவருளால் இயங்கும் இப்பாடசாலை, நீண்டகாலமாக இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும் சமயப் பணிகளுக்கும் பணியாற்றி வருவது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தில் பல கல்வியாளர்களை உருவாக்கிய பெருமை இப்பாடசாலையைச் சாரும். இன்றும் அப்பாரம்பரியத்தைப் பேணி கல்விக்காக தொண்டாற்றும் இப்பாடசாலை தனக்கென சொந்தமான மூன்று மாடிக்கட்டடத்தை கட்டி இக்கல்வியை மேலெடுத்துச் செல்வதற்கு அர்ப்பணித்திருக்கும் அதிபர், ஆசிரியர் இதற்கென உதவிய அனைவரையும் வாழ்த்துகின்றோம். பாடசாலை, கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஏனைய துறைகளிலும் வளர்ச்சி அடைந்து மனித மேம்பாட்டுக்கு சேவையாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.
*இரண்டாவது குருமஹாசந்நிதானம்*

## அறிவு வளர்க்கும் நற்பணி

கற்பக விநாயகர் கோயில்கொண்டு எழுந்தருளி அருள் பொழியும் நற்பதி உரும்பிராய். இவ்விநாயகரின் அருகிலே சைவத்தமிழ் ஊடாக அறிவு வளர்க்கும் நோக்குடன் அமைக்கப்பட்டது உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்..

குறைந்த வளங்களுடன் கூடிய பணியாற்றும் இவ்வித்தியாலயத்தின் ஆளுமைமிக்க அதிபராக விளங்குகின்றவர் திரு.சு.யோகராசா. இவரது தலைமையிலே பாடசாலை புதிய பொலிவு பெற்று வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே மூன்று மாடிக் கட்டடத்தின் கீழ்ப்பகுதி இன்று இந்துசமய விவகாரங்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்களால் திறந்துவைக்கப்படுகின்றது.

இந்த நற்பணி நிறைவேறும் இவ்வேளையிலே பாடசாலைச் சமூகத்தின் சார்பிலே வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீண்டகாலத் தேவையான இம்மூன்று மாடிக்கட்டடத்தின் பணிகளைத் தொடங்குவதற்கு நிதி ஒதுக்கியவர்கள், அயராது உழைத்தவர்கள், யாழ்.அரசாங்க அதிபர், கல்விச் சமூகத்தினர் ஆகியோரையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ந.கணேசலிங்கம்,
*செயலாளர்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.*

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின்
புதிய கட்டடத்தை இன்று முற்பகல் 10.30 மணிக்கு
இந்துசமய விவகார அமைச்சர்
திரு.தி.மகேஸ்வரன் திறந்துவைக்கிறார்.
இந்நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
*அதிபர், ஆசிரியர், மாணவர்,*
*ஊழியர், பா.அ.சங்கம்,*
*ப.மா.சங்கம்.*

## அமைச்சரின் வாழ்த்து

சைவமும் தமிழும் வளர்க்கும் யாழ். முன்னணிப் பாடசாலைகளில் சைவத்தமிழ் வித்தியாலயமும் ஒன்றாகும். இன்று அப்பாடசாலையின் மூன்று மாடிக்கட்டடத்தின் கீழ்த்தளம் திறக்கப்படுவதை ஒட்டி வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டு கல்விப் பணியாற்றும் இப் பாடசாலை பல்வேறு வளங்களை எதிர்பார்த்து நிற்பதை அதிபர் திரு.சு.யோகராசா அடிக்கடி என்னோடு தொடர்பு கொண்டு வேண்டுவதன் மூலம் உணரமுடிகிறது. அவரது அயரா முயற்சியினால் பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் நிறைவேற்ற வேண்டியவற்றிற்கு எனது உதவிக்கரம் என்றும் உள்ளது. இதன் வளர்ச்சிக்காக உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள் பணி மேலும் சிறக்க எதிர்காலத்தில் இப்பாடசாலை நிறைந்த வளமுடன் கல்விப்பணியாற்ற எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

தி.மகேஸ்வரன்,
*இந்துசமய விவகாரங்கள் அமைச்சர்.*

## பவளவிழாக் கண்ட பாடசாலை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முகாமைக்குள் இருந்து முகிழ்ந்தெழுந்து இப்பாடசாலை பவள விழாக் கண்டது. ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களையும், ஐந்நூறு மாணவர்களுக்கு மட்டுமே போதுமான கட்டட வசதிகளையும் கொண்டுவிளங்குவதுடன், பல்வேறு வகையிலும் வளங்களை எதிர்நோக்கி நின்ற நிலையில் தற்போதைய அதிபர் இப்பாட சாலையின் முகாமிப்பை ஏற்றுக் கொண்டார்.

கட்டட தளபாடப் பற்றாக்குறைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியன. வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக நான் பணியாற்றியபோது இப்பாடசாலையின் கட்டடம், தளபாடம், ஆசிரியர் பற்றாக்குறை போன்றவற்றைத் தீர்ப்பதற்காக என்னுடன் அடிக்கடி தொடர்புகளை மேற்கொண்டார்.

அதனடிப்படையில் மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக ரூபா இருபது லட்சம் ஆரம்ப நிதியாக மதிப்பீடு செய்யப்பட்டு வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைக்கு அனுப்பப்பட்டது. கிடைத்த நிதியைக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமே இன்று திறந்து வைக்கப்படுகிறது.

புதிய நிர்வாகத்தில் பல்வேறு ஆக்கப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான முயற்சியும் நடைபெறுவதை நான் அறிவேன்.

பல்வகையாலும் இப்பாடசாலை மேன்மேலும் மேம்பாடடைய வாழ்த்துகின்றேன்.

க.பரமேஸ்வரன்,
*செயலாளர்,*
*இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு,*
*கொழும்பு.*

## உன்னதம் அடையவேண்டும்

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் மூன்று மாடிக்கட்டடத் திட்டத்தின் ஒரு பகுதியான கீழ்த்தளம் வேலை முடிவுற்று திறப்புவிழாவிற்கு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி கொடுப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப பௌதிக வளங்கள் குறைவாக இருப்பதை இவ்வித்தியாலய நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் போது பலமுறை அவதானித்திருந்தேன். இக்கட்டடம் முழுமையாக நிறைவேறுமிடத்து இப்பாடசாலை எதிர்கொள்ளும் இடப்பிரச்சினை ஓரளவு தீரும்.

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இப்பாடசாலை வளங்கள் பல பெற்று உன்னத நிலைக்கு வரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.
*துணைவேந்தர்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## பாரம்பரியம் மிக்கது

யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் புதிய மூன்று மாடிக்கட்டடம் ஒன்றைப் புதிதாக அமைத்து அதன் திறப்பு விழாவை இன்று கொண்டாடுகின்ற செய்தி மகிழ்ச்சிக்குரியதே, ஒரு கல்வி நிலையத்தின் பௌதிக வளங்கள் சிறப்புற அமைந்தால்தான் கல்விப் பணிகள் விரிவடைந்து அதனால் மாணவ மாணவிகள் பயனடை வார்கள்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் கல்விப் பாரம்பரியம் மிக்கதொரு பாடசாலையாகும். அங்கு பௌதிக வளங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. அவர்களது நீண்டநாள் தேவை நிறை வேறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமே. பாடசாலைப் பணிகள் பூரணமாகச் செய்யப்பட்டு வெற்றி நடைபோட என்றும் எனது நல்வாழ்த்துக்கள்.

க.சண்முகநாதன்
*அரச அதிபர், யாழ்.மாவட்டம்.*

## தமிழிற்குத் தொண்டு

குறைவான வளங்களுடன் உரும்பிராயில் நற்பணியாற்றும் சைவத்தமிழ் வித்தியாலயம் தமிழிற்கும் சைவத்திற்கும் மகத்தான தொண்டுகள் செய்துள்ளது. தற்போதைய அதிபர் திரு.சு.யோகராசாவின் ஆளுமையால் மேற்படி பாடசாலை வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அதிகார சபையின் உதவியுடன் மாடிக் கட்டடத்தை அமைத்து விழா நடத்தும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலை கல்வியிலும் நவயுக விஞ்ஞான செயற்பாடுகளிலும் தன் ஆளுமையைப் பெருக்க மேலும் என் ஆசிகள்.

திரு.சி.சிவராசா
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*மலரமைப்பு:* **ப.ஸ்ரீஸ்கந்தராஜா**
*(அலுவலகச் செய்தியாளர்)*


**றூபா பன்முக வர்த்தகம்**
இல.104, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**சிறிமுருகன் நகைமாளிகை**
115, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சுபலக்சுமி நகையகம்**
பலாலி வீதி,
உரும்பிராய்.

**விநாயகர் வியாபார நிலையம்**
கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

**ஐங்கரன் களஞ்சியம்**
இல.06, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

**நதியா ஜீவல்லறி**
இல.02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்**
162, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

**லம்போதரன் ரேடேர்ஸ்**
16, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**கல்யாணி கிறீம் கவுஸ்**
73, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

**சுந்தர்சன்**
ஏக விநியோகஸ்தர்கள்: மின்சார உபகரணங்கள்
மத்திய சந்தை முன்பாக, மானிப்பாய்.

**மா.நாகரத்தினம் அன் கோ**
62, 127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**R.B.BOOKING CENTER**
15, கிராண்ட் பஜார்,
யாழ்ப்பாணம்.

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜீவபாரதி**
**கல்வி நிலையம்**
நயினாதீவு - 05

(C/22883)

உ
## தொண்டமானாறு
## செல்வச்சந்நிதி ஆலயம்
## வியாபாரிகளுக்கான அறிவித்தல்

எதிர்வரும் (08.08.2002) வியாழக்கிழமை பின்னிரவு 3.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் ஆலய வீதிகளில் வியாபாரம் செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வியாபாரிகள் சிரமங்களைத் தவிர்க்க முன்கூட்டியே தங்களுக்குரிய இடங்களைத் தனியாரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு. (5781)

திருவிழா நிர்வாகம்,
அரியரத்தின ஐயர் லோகேஸ்வர ஐயர்.



உ
ஓம் ஸ்ரீசாயிராம்
## சிவாச்சாரிய அபிஷேக வாழ்த்து
## குருப்பட்டம் வழங்கல்

யாழ்.வண்ணை அரசடி விநாயகர் திருவருளால்
பிரம்மஸ்ரீ ஆதிநாராயணஐயர் - பொன்னம்மா தம்பதிகளின் பூட்டனும்
சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் - நாகம்மா,
சிவஸ்ரீ சிவஞானசுந்தரக் குருக்கள் - பர்வதம்மா (அன்னம்மா)
ஆகியோரின் பேரனும் குருபரம்பரையில் வந்தவருமாகிய
**பிரம்மஸ்ரீ சந்திரா ஸ்ரீபதி ஐயர்**
(சமாதான நீதிவான்)

அவர்களுக்கு ஆனித்திங்கள் 27ஆம் நாளாகிய இன்று (11.07.2002) வியாழக்கிழமை முற்பகல் 10.36 மணிமுதல் 12.22 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் சமய விஷேச நிர்வாண தீட்சையும் ஆச்சாரிய அபிஷேகமும் சைவத்தின் குருப் பணிகள் செய்யத் தகுதி வழங்கும் பட்டமளிப்பு விழாவும் நடைபெறும். ஆகவே, இவ்வேளையில் குருப்பட்டம் பெறும் பிரம்மஸ்ரீ சந்திரா ஸ்ரீபதி ஐயர் அவர்கள் சைவசமயக் குருப்பணிகளைச் செய்து உலகில் சிறப்புற வாழவேண்டும் என எல்லாம்வல்ல விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (5775)

பரிபாலன சபையினர்,
யாழ்.வண்ணை அரசடி விநாயகர் ஆலயம்.



## 11ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
19 - 02 - 1964



ஏற்றம்
11 - 07 - 1991

### கப்டன் வானதி
### செல்வி பத்மசோதி சண்முகநாதபிள்ளை

தமிழ்மண் மீட்பில் உன்னைக் கொடுத்து
சுமந்தாய்(த்) தமிழை அள்ளித் தந்தவை
தாயகப் பற்றையே தலைமிசை சுமந்து.
பேய்நீ செருக்களம் செல்லுமுன் செய்தியாய்(ச்)
சொன்ன செந்தமிழ்(ச்) சூத்திரமாக் கவிதைகள்
இன்று நிதர்சன மாகி நிற்பதால்;
உந்தன் உறுதியின் உன்னத உணர்வுகள்
தந்த பேறுகள் தனிப்பே றாகுமே!
"எழுதா தகவிதை" தமிழ்நெஞ் சமெங்கும்
விழுதாய் இவன்றி விளைவைத் தருகுதே!
முழுதாய் அதன்பயன் முற்றி முகிழ்த்திட(ப்)
பொழுது புலர்ந்தது புலிகளின் பூட்கையால்.

(5778)

நீள நினைந்துருகும்: குடும்பத்தினர்.



## கல்லூரி தினவிழா

சண்டிலிப்பாய்,ஜூலை11

இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி தினவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும், முன்னாள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியுமான பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் சங்க லண்டன் கிளைத் தலைவர் எமில் மகேன்குமார் கலந்துகொள்வார். புதிதாக கல்லூரியில் அமைக்கப்பட்ட கணனி அறை கட்டடமும் அன்றைய தினம் திறந்துவைக்கப்படவுள்ளது.

(ம-135)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!
## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 13.06.2002 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் இல்லத்தரசி
### திருமதி தம்பித்துரை அன்னலட்சுமி

அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வு *நாளைமறுதினம் (13.07.2002) சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில* எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*40/1, கலைமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (5804)

- கணவர், பிள்ளைகள்.






## க்ராக் க்ரீம்

**அனைத்து க்ராக் க்ரீமுடன், போரோசொப்ட் 5கிராம் பக்கெட் இலவசம்**



"க்ராக் க்ரீம்" வலி, எரிச்சல் இரத்தக்கசிவு, வீக்கம் என்பவற்றிலிருந்து பாதுகாத்து இழந்த சரத்தை மீட்டு வெடிப்புக்களை நிரப்புகிறது. இதன் சிறப்பு ஆயுர்வேத பார்முலா எவ்வித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் 14கே நாட்களில் வெடிப்புக்களை நிரப்பி பாதங்களை அழகுபடுத்துகிறது. தொடர்ந்து பாவிப்பதன் மூலம் திரும்பத் திரும்ப வருவதை தடுக்கலாம்.

(C/22881) விநியோகஸ்தர் பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
1933 ❖ 04 ❖ 05



விண்ணில்
2001 ❖ 07 ❖ 11

### அமரர் வயித்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர்

காலமெல்லாம் எம்முடன் வாழாமல்
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு,
மீளாத்துயில் கொண்டதேனோ?
காலத்தின் வட்டத்தில் ஆண்டொன்று சென்றாலும்
எம் அகத்தில் அணையாத தீபமாய்
உயிரோடு வாழ்ந்து எம்மை என்றும்
வழிநடத்தும் எம் அருமை அப்பாவே!.

*உங்கள் ஆன்மா சாந்திபடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

*இல.5/15, மாட்டீன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (5769),

- குடும்பத்தினர்



'நிப்போன்' சிக்கன சக்தி பல்ப்களை பாவித்து உங்கள் மின்கட்டணங்களை குறையுங்கள். உங்கள் மின் கட்டணத்தில் 80% சேமிப்பு உண்டு.


**சமன்பாடுகள்:**

மாதமொன்றிற்கு 90-180 அலகுகளைப் பயன்படுத்தும்போது ஒரு அலகுக்கான கட்டணம் ரூபா 10.60. 100 வற் பல்ப் ஒன்றை நாளொன்றுக்கு நான்கு மணித்தியாலங்கள் வீதம் மாதமொன்றிற்கு பயன்படுத்துவதில் உள்ள வேறுபாட்டை காணலாம்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| சாதாரண பல்ப் | 100 வற் X 4 X 30 / 1000 வற் | X 10.60 = ரூ. 127.20 |
| நிப்போன் சிக்கன சக்தி பல்ப் | 20 வற் X 4 X 30 / 1000 வற் | X 10.60 = ரூ. 25.44 |
| ஒரு மாதத்தில் சேமிப்பு: | = ரூ. 101.76 | |

### 3 மாதங்களில் ரூ.305.28. இது உங்கள் நிப்போன் சிக்கன சக்தி பல்ப் உங்களுக்கு சேமித்துக் கொடுக்கின்றது.




ஒரு வருட உத்தரவாதம்

1) உயர் சுடர் ஒளிப் பிளம்பு.
2) உயர் சக்தி ஆற்றல்.
3) குறைந்த மின்வலுவில் பற்றத் தொடங்குதல்.
4) குறைந்தளவு அல்லது உயர்அளவு 140V-260V மின்வலுவில் எரியும்.
5) அடிக்கடி மின்னொளியில்லை
6) மின்னல் பாதுகாப்பு
7) சிறிதிடைபீட்டொளி பாதுகாப்பு பியூஸ்.
8) நிப்போன் சிக்கன சக்தி பல்ப்புகள் பியூஸ், ரெஸிஸ்ரர் பாதுகாப்புக் கொண்டவை.



2U
5 வற் - 25 வற்
7 வற் - 35 வற்
9 வற் - 40 வற்
11 வற் - 60 வற்
13 வற் - 75 வற்
15 வற் - 80 வற்

13 வற் - 75 வற்
16 வற் - 80 வற்
20 வற் - 100 வற்



3U



குறியீக்கு பல்ப்புகள்
13 வற் - 75 வற்
20 வற் - 100 வற்



குளோப
9 வற் - 40 வற்



3U
16 வற் - 80 வற்
18 வற் - 90 வற்
20 வற் - 100 வற்
22 வற் - 110 வற்
24 வற் - 120 வற்
26 வற் - 140 வற்



உறையின்றி 3U
5 வற் - 25 வற்
9 வற் - 40 வற்

உறையுடன் 3U
5 வற் - 25 வற்
9 வற் - 40 வற்

## லங்கா நிப்போன்

*தலைமைக் காரியாலயம்:*
இல.18, கெய்சர் வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி: 437735, 324726
தொலைநகல்: 437766

*கிளை:*
இல.10, ட்ரிலோனி பிளேஸ்,
(பால்சாலையின் பின்புறம்)
பம்பலப்பிட்டிச் சந்தி, கொழும்பு - 4
தொலைபேசி: 589992, 582365

(சி22866)

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.. லங்கா நிப்போன் என்று கேட்டு வாங்குங்கள்..

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

அலுவலகப் பாவனைக்கேற்ற, ... ள்பிட வசதிகளுடன்கூடிய (400 - 500' சதுர அடி பரப்பு விஸ்தீரணமுள்ள) கட்டடம் ஒன்று யாழ். நகர மையப் பகுதியில் உடனடியாக வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல.1564, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5812)

உரும்பிராய்க்கும் திருநெல்வேலிக்கும் இடையில் பலாலி வீதியை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்று உடனடியாக வாடகைக்குத் தேவை தொடர்பு: விளம்பர இல. 1563, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5811)

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருந்து 200யார் தூரத்தில் 11/2 பரப்புக் காணி கல்வியங்காட்டில் விற்பனைக்கு உண்டு. 3 அறைகள் ஒரு ... இருதமான அத்திவாரம், கிணறு, ...டம், மின்சாரம், வாகனப் போக்குவரத்துப் பாதை வசதி என்பன உண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்ல உள்ளதால் உடன் விற்பனை. தொடர்பு: க.அம்பிகைபாகன், 38, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (5800)

## அபூர்வ ஜோதிடம்

சித்தர் போகரின் ஏட்டிலே தீராத நோய் ஈரஞ்சு வேளையிலே இல்லா தொழித்தோடும் அதிர்ஷ்டபலன் சனி, ஞாயிறு 8.30-12.30. தொடர்பு: அடிய பாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (5798)

## காய்ச்சலால் சிறுமி மரணம்

யாழ்ப்பாணம்,ஜுலை11

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 7 வயதுச் சிறுமி சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் அங்கு உயிரிழந்தார்.

நவாலி, அட்டகிரியைச் சேர்ந்த இந்திரகுமார் சிந்தியா (வயது - 7) என்ற சிறுமியே மரணமானவர் ஆவார். (ஒ-8)

## சம்பள நிலுவை கொடுப்பனவு

குருநகர்,ஜுலை11

தீவக வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவுகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் தீவக வலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

தனித்தனி காசோலைகளாக வழங்கப்படவுள்ள இந்நிலுவைக் கொடுப்பனவுகளை ஆசிரியர்கள் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளலாம் என தீவகவலயக் கல்வித்திணைக் களக் கணக்காளர் க.தேவஅருள்ராஜா தெரிவித்தார். (ம-51)

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜுலை11

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் மாணிக்க வாசகர் சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் பூசையும், திருவாசகப் பாராயணமும் இடம்பெற உள்ளது.

அதனைத்தொடர்ந்து நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானத்தில் மாணிக்க வாசகர் சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற உள்ளன. (ஒ-8)


**QUICK TRANSLATION SERVICE**

பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும் அழகு தமிழிலும் மொழிபெயர்த்துக் கொடுக்கப்படும்.

Tamil to English - Rs.20/= per page
English to Tamil - Rs.40/= per page

யாழ். வதிரிவாசன், 'திருவள்ளுவர் அகம்', வதிரி, கரவெட்டி. (5817)



கரம்பொன்

**புனித செபஸ்தியார் ஆலய பெருவிழா**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : | 15.07.2002 திங்கட்கிழமை மாலை 5 மணி |
| நற்கருணை ஆராதனை | : | 20.07.2002 சனிக்கிழமை மாலை 5 மணி |
| பெருவிழாத் திருப்பலி | : | 21.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி |

கரம்பொன். (5824) - பங்குத்தந்தை.



## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் மொத்தவிற்பனை நிலையத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

(1) சிட்டை லிகிதர்
(2) லிகிதர் (இருபாலாரும்)
(3) விற்பனையாளர்

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு எதிர்வரும் 15.07.2002 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல: 1565,**
**C/o உதயன், யாழ்ப்பாணம்.** (5819)


# அஞ்சலி செய்கின்றோம்!



## செல்லத்துரை நவரத்தினம்

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய நிர்வாக சபையின் முன்னாள் செயலாளராகிய செல்லத்துரை நவரத்தினம் அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தி எம்மைப் பேரதிர்ச்சியடைய வைத்துவிட்டது.

அவர் செயலாளராக இருந்த காலத்தில் இராஜகோபுரத் திருப்பணி, மணிமண்டபத் திருப்பணி, பஞ்சமுக விநாயகர் கோயில் திருப்பணி ஆகியவற்றைப் பொது மக்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றியதுடன், கடைசியாக நடைபெற்ற சித்திரத் தேர்த்திருப்பணிக்கும் ஆகக்கூடுதலான நிதியைக் கனடா நாட்டில் சேகரித்து இங்கு கொண்டுவந்து தந்தமையை நன்றியுடன் நினைவுகூருகின்றோம். சித்திரத்தேருக்கு பவளக்கால் நட்டு, திருத்தேர்ப் பவனியைக் காணவைத்தது எமது விநாயகப் பெருமானின் பெரும் கருணையே!

அன்னாருடைய ஆத்ம சாந்திக்கு தாவடி விநாயகரை வணங்குகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5823) தாவடி பொதுமக்கள் சார்பில் மேற்படி ஆலய நிர்வாக சபை.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் நவரத்தினராஜா ரவிசங்கர்

(யாழ். மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவன்)

அன்னாரின் மரணத்தை அறிந்து அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளோம். அவரின் பிரிவுத்துயரினால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(5815) அயலவர் திருநெல்வேலி.

உ
ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஓராண்டு ஓடியதே!

சுற்றும் புவியில் தோற்றம் 1917 - 12 - 11



ஆடும் அரன் நிழலில் ஏற்றம் 2001 - 06 - 22

## அமரர் ஸ்ரீமதி வள்ளியாச்சி பேரம்பலம்

திதி: ஆனிபூர்வ பிரதமை 2002.07.11

*எமையெல்லாம் வையத்தில் வாழ்வாங்கு வாழவைத்த அம்மா, உம் நெடும் பயணக் காட்சிகள் இன்றும் பசுமையாயுளதே!*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

"கமலபதி", 571/1, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (5818) அன்பலா மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# அரியாலையில் மணல் அகழ்வை தடுக்க நடவடிக்கை தேவை!

## அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை11

அரியாலைப் பகுதியில் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளும்படி யாழ் அரச அதிபரிடம் யாழ்.மாநகராட்சி மன்ற உறுப்பினர் எஸ்.ஜெயசந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச அதிபருக்கு இதுதொடர்பாக எஸ்.ஜெயசந்திரன் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள முள்ளி என்னும் பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதால் மண்ணரிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் போக்குவரத்துப் பாதைகளிலுமுள்ள மணல் அகழ்ந்தெடுக்கப்படுகிறது. இதனால் பாதைகள் அழிந்து போக்குவரத்துப்பிரச்சினைகளும் ஏற்படவாய்ப்புள்ளது. மக்கள் மீளக்குடியமர இருக்கும் இவ்வேளையில் இது போன்ற செயல்கள் மக்களை மேலும் அசௌகரியங்களுக்குள்ளாக்குவதாகவே அமைகின்றன. எனவே இதுவிடயத்தில் கவனமெடுத்து அதனைத் தடுத்து நிறுத்தவும் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்-என்றுள்ளது. (ஒ)

# சிங்கப்பூர் பெண்கள் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு,ஜுலை11

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக மோசடி 'விஸா'வுடன் பிரான்ஸ் செல்ல முற்பட்ட இரண்டு சிங்கப்பூர் பெண்கள் விமானநிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

ஸ்ரீலங்கா விமானம்மூலம் இலங்கை வந்த லியாவேலிம், லிம்ஜோலிம் ஆகிய இந்த இரு பெண்களுக்கும் சிங்கப்பூரில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டில் விஸா மோசடி செய்யப்பட்டிருந்ததாகக் குற்றப்புலனாய்வுத் துறையினர் தெரிவித்தனர்.

இவர்களை பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்கு இலங்கையிலிருந்து ஏற்பாடுகளைச் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் ஒரு சிங்கப்பூர் வாசியை பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தி நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

இவர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எம்.என்.பூரான் உத்தரவிட்டார். (ஒ)

# வளம்பெற்று வாழ்க!



## திரு.சுப்பிரமணியம் யோகராஜா

(B.A., Dip. In Ed., Tr.)

கடமையேற்ற நாளிலிருந்து கருமமே கண்ணாய்
பற்பல வளம்பெருக்கி
சைவத்தமிழ்க்கோர் வரலாறு படைத்த
எம் அதிபர் வளம் பெற்று வாழ்க!

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய (5820) ஆசிரியர் நல நோன்பு மன்றம்.

# பணிவான வாழ்த்துக்கள்



## திரு.சுப்பிரமணியம் யோகராஜா

*(B.A.,Dip In Ed.,Tr.)*

*உதவியாளர் எமக்கு, உள்ளன்போடு வழிகாட்டி, வளம்பல பெருக்கிட வாய்த்ததொரு மீகாமன் எம் அதிபர் பணிமேலும் வளர பணிவாக நாமிங்கு வாழ்த்துகின்றோம்.*

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். (5821) திருமதி ஜெ.முருகதாஸ் (பா.மு.அ.), திரு.த.தயாளன் (அ.உ.)

# காணவில்லை

பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த



## பொன்னையா நல்லதம்பி

*(இளைப்பாறிய இ.போ.ச. டிக்கெட் பரிசோதனைக்குழு பொறுப்பதிகாரி)*

அவர்கள் கடந்த 2002-07-01ஆம் திகதிமுதல் காணாமற்போய்விட்டார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் கீழ்வரும் முகவரிக்கு அறியத்தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை. (5816) மனைவி, பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

கட்டடங்கள் திணைக்களத்தில் கடமையாற்றும்
திரு.ச.செ.மரியதாஸ்
அவர்களின் அன்புத் தாயாராகிய

## திருமதி சவரிமுத்து மரியம்மா

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். கட்டடங்கள் திணைக்கள அலுவலர்கள், கட்டடங்கள் திணைக்களம். (மா.) (5822)


# வாழ்வை வளமாக்கும் ஐ.பி.ஏ.எஸ். நிறுவனம்

அதிநவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக முழு உலகமும் ஒரு பூகோள கிராமமாக சுருக்கி விட்டது. இந்நிலையில் உலக நாடுகளின் பொருளாதாரம் ஒன்றையொன்று தங்கியிருக்கும் நிலைமை உருவாகியுள்ளது. வர்த்தகம், கைத்தொழில், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய மாற்றங்களை • எதிர்வு கொள்ளக்கூடிய வகையில் எமது மாணவ சமூகமானது தயார்ப்படுத்தப்பட்டுள்ளதா?

இன்று தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்ததான கணனி மயப்

**பி.வசந்தகுமார்**

படுத்தப்பட்ட வர்த்தக சேவைகள் பலவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக இலத்திரனியல் வர்த்தகம்(E-Commerce), கையடக்கத் தொலைபேசி வர்த்தகம் (M-Commerce), டிஜிட்டல் வர்த்தகம்(D-Commerce) இலத்திரனியல் வங்கி(E-Banking) இலத்திரனியில் பணம்(E-Money) அத்துடன் கைத்தொழில்கள் பற்றிய தகவல்களை விற்பனை செய்யவென ஈ.ஐ.பி. (Enterprise information Project) என்ற பல்வேறு




வகையான புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினை விட முகாமை செயற்பாடுகள் அனைத்தினையும் ஒருங்கிணைத்து எம்.ஆர்.பி. முறை என்னும் புதிய தொழில்நுட்ப முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் கணனி மென்பொருள் வடிவமைப்பாளர்களின் (Software developers) முயற்சியில் இன்று கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் வெவ்வேறு வகையான புதிய நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய அபிவிருத்தி நடைமுறைகளினால் எதிர்காலத்தில் வேலை இல்லாப் பிரச்சினையானது விஸ்வரூபம் எடுக்கக்கூடும். ஆனால், இத்தகைய புதிய செயற்பாடுகளை எதிர்காலத்தில் எதிர்வு கொள்ளக்கூடிய கல்வி, தொழில்நுட்ப அறிவு, நடைமுறை அனுபவம் என்பவனவற்றினை எமது சமுதாயம் பெற்றுக்கொண்டுள்ளதா என்ற வினாவினை எழுப்பினால் விடை இல்லை என்றே கூறலாம்.

இந்நிலையில் இன்றைய காலகட்ட தேவையினை உணர்ந்து 'Institute for Professional Accounting Studies' நிறுவனம் எதிர்காலத் தொழிறசந்தைச் சவால்களை எதிர்வு கொள்ளக் கூடிய வகையிலும், சிறந்த தலைமைத்துவப் பண்பினை வளர்க்கக் கூடிய வகையிலும் தொழில்சார் ஆங்கிலப் பிரயோகத்தினை வளர்க்கக கூடிய வகையிலும் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தி மாணவர்களைப் தயார்ப்படுத்த முன்வந்துள்ளது.

தற்போது பத்திரிகைகளில் வெளிவரும் விளம்பரங்களில் கணக்காளர் (Accountant), நிதி முகாமையாளர் (Finance Manager) நிர்வாக இயக்குநர் (Managing.Directors), முகாமைத்துவ ஆலோசகர்கள் (Management Consultant), வரி ஆலோசகர்கள் (Tax Consultant) போன்ற அதி உச்சமட்ட முகாமைப் பதவிகளுக்கு கேட்கப்படும் கல்வித் தகைமைகள் யாவும் தொழில சார் கல்வி தகமைகளும்.

எதிர்காலத்தில் அரச துறையின் வேலைவாய்ப்புகள் அருகிவரக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே நாட்டின பொருளாதாரத்தில் தனியார் துறையின் முக்கிய பங்குபற்றி அரசாங்கம் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளது. இதற்கேற்ப தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற இளைய தலைமுறை தம்மைத்தாமே தயார்ப்படுத்த வேண்டும்.

இதற்காகவே ஐ.பி.ஏ.எஸ். நிறுவனமானது ஆரம்பத்தில் கணக்கியல், சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளிலேயே தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது. இனிவரும் காலங்களில் காப்புறுதி, வங்கித்துறைசார் குறித்த கற்கை நெறிகளையும் அறிமுகப்படுத்தவுள்ளது. இக்கற்கை நெறியினைப் பயில கணிதம், விஞ்ஞானம், வணிகம், கலை என எத்துறை சார்ந்தவர்களாலும் முடியும்.

இக்கற்கை நெறிகளைப் பயின்று தேவையான தொழில்சார் அனுபவத்தினைப் பெற்றவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்லாயிரக்கணக்கான ரூபா சம்பளத்தில் உயர் பதவிகளில உள்ளனர். அத்துடன் கனடா, நியுசிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு புள்ளி மதிப்பீட்டு முறையில் (Point System) விஸாவிற்கு விண்ணப்பிக்க இக்கற்கை நெறியைக கற்றவர்க்கு வாய்ப்பு அதிகம்.

இத்தகைய கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்து எதிர்காலத்தை வளமுடன் அமைக்கத் துடிப்போருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது ஐ.பி.ஏ.எஸ். நிறுவனம். நல்லூர் செமமணி வீதியில் கிட்டுப் பூங்கா முன்பாக உள்ள ஐ.பி.ஏ.எஸ். நிறுவனத்திற்கு சென்றால் உங்கள் வாழ்வை வளமாக்க மேலதிகத் தகவல்களைப் பெறலாம். ☆

## 'ஹீரோ' சைக்கிள் நிறுவனத்தின் மாணவர் உதவித் திட்டம்

கார்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் விதம்விதமான வகைகள் வந்து குவிந்தாலும் உழைக்கும் வர்க்கத்தினர் நம்பி இருப்பது சைக்கிள்களைத்தான்.

இதனைக் கருத்திற்கொண்டு அவர்களது தேவைகளுக்கேற்ப சைக்கிள்களை வடிவமைத்து வழங்கி புகழ் பெற்றது 'ஹீரோ' சைக்கிள் நிறுவனம்.

இப்போது 'ஹீரோ' சைக்கிள் நிறுவனம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவிடும் நற்பணி ஒன்றை மேற்கொண்டுள்ளது. 'ஹீரோ' சைக்கிள் நிறுவனத்தினரின் இந்த உதவியைப் பெறவிரும்பும் மாணவர்களிடமிருந்து 'ஹீரோ' சைக்கிள் நிறுவனத்தினர் விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றனர். இதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதும் இலகுவானதே.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவனோ அல்லது மாணவியோ தாம் கல்வி கற்கின்ற பாடசாலை அதிபருடாக தாம் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்தும் சிபாரிசுக் கடிதத்துடன் தம்மைப்பற்றிய விவரங்களையும் இணைத்து விண்ணப்பத்தை அனுப்பலாம்.

இந்த விண்ணப்பங்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

*'ஹீரோ' சைக்கிள் லிமிடெட், 74, டாம் வீதி, கொழும்பு - 12.*

இந்தத் திட்டத்தில் உதவிபெற தெரிவுசெய்யப்படும் மாணவமணிகளுக்கு 'ஹீரோ' சைக்கிள் நிறுவனத்தினர் உதவி வழங்கவுள்ளனர்.(ஒ)

# கணக்கீட்டு வல்லுநர் பற்றாக்குறை போக்கிடும் ஏ.ஏ.ரீ. கற்கை நெறி

வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய உலகிற்கு நாமும் ஈடு கொடுத்துப் பயணிப்பதாயின் தற்போதைய வாழ்க்கையுடன் இணைந்து செல்லத்தக்க புதிய கற்கைநெறிகளைக் கற்பது அவசியமாகிறது.

அத்தகைய ஒரு கற்கையே 'இலங்கை கணக்கியல் தொழில் நுட்ப வல்லுநர்' தரக் கற்கை நெறியாகும். 'ஏ.ஏ.ரி.' என்று அழைக்கப்படும் இலங்கை கணக்கியல் தொழில் நுட்ப வல்லுநர்கள் (Association of Accounting Technicians of Sri Lanka) என்னும் இக்கற்கை நெறியானது அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், கணக்காய்வு நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள், வங்கிகள் என்பவற்றில் காணப்படும் கணக்கீட்டுத் தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கென உருவாக்கப்பட்டது. இந்தக் கற்கையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதே இலங்கை கணக்கியல் தொழில் நுட்ப வல்லுநர்கள் அமைப்பு.

இந்த அமைப்பு இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவனத்தைச் சேர்ந்த 8 பேர், உயர்கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட இருவர், ஏ.ஏ.ரி. போன்ற பேரவை உறுப்பினர்கள் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மேலும் ஏ.ஏ.ரி. சர்வதேச கணக்காளர் கூட்டமைப்பில் 1989 மேயில் அனுமதிக்கப்பட்டதுடன் ஆசிய பசுபிக் கூட்டமைப்பின் கணக்காளர் அமைப்பில் 1989 செப்ரெம்பர் மாதம் அங்கத்துவம் பெற்றது.

ஏ.ஏ.ரி. கற்கைநெறியை மேற்கொள்வதற்கான ஆகக்குறைந்த தகைமைகள்:

★ 18 வயதிற்கு உட்பட்டோராயின்,

1. ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் (G.C.E. O/L) 6 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன், 3 பாடங்களில் திறமைச் சித்தியும், கணிதம் அல்லது வர்த்தக பாடத்தில் சித்தியடைந்திருத்தலும் வேண்டும்.

★ 18 வயதிற்கு மேற்பட்டோராயின்

1. ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

அல்லது

2. ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### பதிவு செய்யும் முறை

ஏ.ஏ.ரி. நிறுவனத்தில் பதிவு செய்ய விரும்புபவர் ஆகக்குறைந்த தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு உள்ள ஒருவர் நேரடியாக ஏ.ஏ.ரி. நிறுவனத்திலோ அல்லது ஏ.ஏ.ரி. நிறுவனத்தில் தம்மைப் பதிவுசெய்த முகவர் நிறுவனத்திலே ரூபா 50/- மட்டும் செலுத்தி மாணவர் வழிகாட்டி ஒன்றை வாங்கி, அவ்வழிகாட்டி நூலில் உள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, மக்கள் வங்கி அல்லது வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை ஒன்றில் ரூபா 1000/- - செலுத்தித் தம்மைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

பதிவுசெய்வதற்கு 'பாஸ்போட்' அளவு புகைப்படங்கள் இரண்டு, கல்வித் தகைமை உட்பட தரவிவர சான்றிதழ்களின் நகல்கள் ஆகியவை தேவைப்படும்.

இக்கற்கை நெறியானது 3 கட்டங்களைக் கொண்டது.

முதலாவது கட்டத்தில் அடிப்படைக் கணக்கீடு, வர்த்தகக் கணக்கியல் மற்றும் புள்ளிவிவரவியல், பொருளாதாரம் மற்றும் வணிகம் ஆகிய பாடங்களையும் -

இரண்டாம் கட்டத்தில், கணக்கீடு, வரி இயல் மற்றும் கணக்காய்வு, வர்த்தகச் சட்டம் மற்றும் முகாமைத்துவம், வர்த்தகத் தொடர்பு I ஆகிய பாடங்களும் -

மூன்றாம் கட்டத்தில், வருமான வரி மற்றும் அளவை தொழில்நுட்பம், விலை முகாமைத்துவக் கணக்கீடு, நிதிக் கணக்கீடு, வர்த்தகத் தொடர்பு II, கணக்காய்வுப் பயிற்சி அல்லது நிதி முகாமைத்துவம் அல்லது பொதுத்துறைக் கணக்கீடு ஆகிய பாடங்களும் - அடங்கியுள்ளன.

### பதிவுத் திகதியும் பரீட்சைத் திகதியும்

பரீட்சையானது ஒவ்வொரு வருடமும் ஜுன் மற்றும் டிசெம்பர் மாதங்களில் (வருடத்தில் இருமுறை) நடைபெறும். ஜுன் மாதம் நடைபெறும் பரீட்சைக்குப் பரீட்சார்த்தி தோற்ற விரும்பின் ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னரும், டிசெம்பர் மாதம் நடைபெறும் பரீட்சைக்குப் பரீட்சார்த்தி தோற்றவிரும்பின் ஜுலை மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவேண்டும். **Carrer com. Institute**

## திருகோணமலையில் நடந்த

# விளையாட்டுப் போட்டியில் அடிதடி; ஆசிரியை உட்பட ஏழு பேர் காயம்!

### மாணவியரும் மருத்துவமனையில்

திருகோணமலை,ஜுலை11

திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான எல்லே விளையாட்டுப் போட்டியொன்று அடிதடியில் முடிந்தது.

இதனால் 7பேர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருககின்றனர்.

வடக்கு - கிழக்கு பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்போது திருகோணமலையில் நடைபெறுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான எல்லே போட்டி நடந்தது. அதில் செங்கலடி மத்திய மகாவித்தியாலயமும், அபயபுர மத்திய மகா வித்தியாலயமும் மோதின. திருகோணமலை முற்றவெளி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

ஆட்டத்தின் முடிவில் நடுவர் வழங்கிய தீர்ப்புக் குறித்து சர்ச்சை எழுந்தது. வாய்த்தர்க்கம் கடைசியில் அடிதடியில் முடிந்தது. மூங்கில் பொல்லுகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 7பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 3 மாணவர்கள், 2 மாணவிகள், ஆசிரியை ஒருவர் மற்றும் ஒரு பயிற்றுநர் ஆகியோர் அடங்குவர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக போட்டி ஒழுங்கமைப்பாளர்களுடன் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாரணை நடத்தியுள்ளார். (ம)

## வர்த்தக, ஓட்டோ, மினிபஸ், ஒலிநாடா சங்கங்களுக்கு

# அரசியல் பணிமனையில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை11

யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் நிர்வாகிகள், ஒலிப்பதிவு நாடா விநியோகஸ்தர்கள், மினிபஸ் உரிமையாளர் சங்கங்களின் நிர்வாகிகள், ஓட்டோ சங்கங்களின் நிர்வாகிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பணிமனையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள மேற்படி பணிமனையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற உள்ளதாகவும் -

சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படியும் - கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

# இரு மருந்தகங்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜுலை11

யாழ்.நகரில் உள்ள இரு மருந்தகங்களுக்கு விலைப்பட்டியலை பொதுமக்கள் பார்வைக்கு வைத்திராத குற்றச்சாட்டின் பேரில் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி இரு மருந்தகங்களும் மக்கள் பார்வைக்கு விலைப்பட்டியலை வைத்திராமல் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதைக் கண்டுபிடித்த விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இந்த மருந்தகங்களின் மீது யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிவான் இ.த.விக்னராஜா, மேற்படி மருந்தகங்களுக்கு அபராதம் விதித்தார். (ஒ-8-10)

## சாயி சிந்தனை



### அன்பில் வாழுங்கள்.....!

அன்பின் வடிவங்களே! மனித வாழ்க்கை என்பது அன்பு மயமானது. நீங்களே அன்பின் வடிவங்கள். மனித உயர் குணங்களுக்காக உழையுங்கள். வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? அன்பு. அன்பு மட்டுமே! அன்பே கடவுள். அன்பிலேயே வாழுங்கள்.

இதுதான் நீங்கள் செய்யவேண்டியது. அன்பை நாம் உருவாக்கிக்கொள்ளும்போது அங்கே இறைவன் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறார். அவரைத் தேடி நீங்கள் எங்கும் செல்லவேண்டியதில்லை. எங்கும் நிறைந்திருப்பவரை நீங்கள் தேட வேண்டிய அவசியம் என்ன? நீங்களே கடவுள். நீங்களே கடவுளின் வடிவம். உங்கள் உண்மையான அடையாளத்தையும், ஆத்மாவையும் புரிந்துகொள்ளாத வரையில் செய்யும் முயற்சிகள் அனைத்தும் வீண். எல்லோரையும் நீங்கள் யார்? நீங்கள் யார்? என்பதை கேட்பதை விட்டுவிட்டு நான் யார்? நான் யார்? எனக் கேட்டுக்கொள்ளுங்கள்.

இது எனது பொருள். இது எனது சொத்து என்பது வெறும் மாயை. இதெல்லாம் உலகியலான பொருள்கள். இந்த உலகாயதமான உலகிற்கு நீதான் தலைவன். மனதை அடக்கி தலைவனாகத் திகழவேண்டும். இதைத தான் நாம் இன்று கற்றுக்கொள்ளவேண்டும். நமது உண்மையான அடையாளம் என்னவென்று புரிந்துகொள்ள முயற்சிசெய்யவேண்டும்.

*(ஆதாரம்:- சனாதன சாரதி - 1999-ஆடி-28)*

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை11

வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். திருவிழாக் காலத்தில் தினமும் அ.கமலானந்தன் 'உத்தம கீதை' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.(ஒ-8)

★ ★ ★

கட்டுவன் முனியப்பர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 11 மணிக்கு தூபி அபிஷேகத்தைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும். (ஒ-ரி)

★ ★ ★

யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று ஆரம்பமாகித் தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 5 மணிக்கு தெய்வீகச் சொற்பொழிவும் இடம்பெறும். (ஒ-ரி)

★ ★ ★

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய வருடாந்த திருவிழா நவநாள் ஆராதனைகளின் இறுதி நாளான இன்று வியாழக்கிழமை காலை 7.15 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொருப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (ஒ-ரி-5)

★ ★ ★

உடுப்பிட்டி இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா நேற்று ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெற்றுவருகின்றது.

தேர் உற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறும். (எ-ரி)

## அபிவிருத்தி தொண்டர்களுக்கான எழுத்துப் பரீட்சை

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இரண்டாவது பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான எழுத்துப்பரீட்சை இன்று காலை 9.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-8-100)

## பள்ளிவாசல் புனரமைப்பு

சாவகச்சேரியில் உள்ள மொகிரீன் ஜும்மா பள்ளிவாசலை புனரமைப்பது தொடர்பாக ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் அ.அப்துல்லா, செயலாளர் வீஎம்நஜீப் ஆகியோர் சாவகச்சேரிக்கு வந்துள்ளனர்.

பள்ளிவாசலுக்கு ஏற்பட்டுள்ள சேத விவரங்களை மதிப்பீடு செய்வதுடன் முஸலிம் மக்களுக்குத் தேவையான விடயங்கள் பற்றி சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடன் அவர்கள் கலந்துரையாடி வருகின்றனர். (ஒ-117)

## முகாமைத்துவப் பயிற்சி

கொழும்புத்துறை,ஜூலை11

கிராமமட்டத்தில் அமைந்துள்ள முன்பள்ளி, சனசமூக நிலையத் தலைவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் காலை 8.30 முதல் மாலை 5.30 மணிவரை நல்லூர் விவசாயப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி தலைமையில் நடைபெறும் இம்முகாமைத்துவப் பயிற்சி நெறிக்கு அழைக்கப்பட்ட சனசமூக நிலையத் தலைவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8-ரி)


### தேவை

பெண்களுக்கான உடைகள் தைக்க, வெட்டத் தெரிந்த பெண்கள் தேவை.

தொடர்பு:
பானு காமன்ஸ்
இல. 11, 233A, பிறவுன் வீதி,
(பிறவுன் றோட், நாவலர் றோட் சந்தி)
யாழ்ப்பாணம். (5832)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் (Electronic Item) வர்த்தக ஸ்தாபனத்துக்கு


காசாளர்
கணக்காளர்
விற்பனையாளர்
} ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு:
அருண் வீடியோ மூவி,
பிரதான வீதி,
நெல்லியடி. (5837)

# ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின் வடபிராந்திய இளைஞர் பிரிவினால் நடத்தப்படும் உன்னதக் கண்காட்சி



மனிதன் என்றால் யார்?
மனதின் குறைபாடுகள் எவை?
குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் எப்படி?
இவற்றை விளக்கும்



# மனித உன்னதம்

- ★சத்தியசாயி எஜுகேயர்
- ★பாலவிகாஷ்
- ★பெற்றோரியல்
- ★மனித மேம்பாட்டுக் கல்வி
- ★தலைமைத்துவம்
- ★வீடியோ படக்காட்சி

என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இடம் : இராமநாதன் கல்லூரி - மருதனார்மடம்

காலம் : ஜூலை 12, 13, 14 ஆம் திகதிகளில்

நுழைவு நேரம் : காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

இளைஞர் பிரிவு,
வடபிராந்தியம். (5841)

## Global Informatics (Pte) Ltd.

379, Kasthuriyar Road, Jaffna.

இன்றுமுதல் உங்களது சகல விதமான கணனித் தேவைகளை பூர்த்தி செய்ய ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

கலாநிதி சி. மகேசன் (தலைவர், கணனி விஞ்ஞானத்துறை, யாழ் பல்கலைக்கழகம்) அவர்களால் இன்று காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

- Personal Computers.
- Computer Accessories
- Servers
- Computer Maintenance, Service Contract & Repairs
- Networking & Data Communication
- Software Development
- Networking Products
- Internet & email Services
- Corporate Training & Solution (Banking, Business Administration & Technical)
- Structured Cabling




Global Networking & Communication

Head Office: #17A/1,Moors Road, Colombo 06.
Tel : +94 (1)505849 07739?246 ,077364247
Fax : 94(1) 505849 email : gi@dialogsl.net

எங்கள் சேவையைப் பெற்றிட அனைவரையும் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாண மக்களின் நல்லபிமானத்தைப் பெற்ற

பாட்டா

17.06.2002 முதல் தனது மொத்த விற்பனையை இப்போது மீண்டும் யாழ். மண்ணில் ஆரம்பித்து வைத்துள்ளது!

சிறுவர், சிறுமியர், பாடசாலை மாணவ, மாணவிகள், பெரியவர்கள் உட்பட அனைவருக்கும் ஏற்ற எல்லா வகையான நவீன காலணிகளையும் விசேட கழிவுடன் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

BATA DEALER SERVICE CENTRE
253, Stanley Road, Jaffna. (C/22894)


# பாமதி கருணை இல்ல விடுதி

## திறப்பு வைபவம்

அமரர் திருமதி பாமதி தனபாலசுந்தரம்
அவர்களின் நினைவாக
கந்தஉடையார் ஒழுங்கை, பருத்தித்துறையில் நிறுவப்பட்டுள்ள

## கருணை இல்ல விடுதி

இன்று (11.07.2002) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு
சுவாமி சித்ரூபானந்தா
அவர்களால் திறந்துவைக்கப்படவுள்ளது.

கந்தவுடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை. (C/22891)

செயலாளர்,
பாமதி கருணை இல்லம்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 - 06 - 1933 |  | 03 - 07 - 2000 |

## அமரர் கந்தையா மயில்வாகனம்

(பொலிஸ் பப்பா)

*(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)*

திதி: பிரதமை 11.07.2002

ஆண்டு இரண்டு சென்றதோ என் வாழ்வில் உங்களைப் பிரிந்து நித்தம் நித்தம் உங்கள் நினைவால் சித்தம் கலங்கித் தவிக்கிறேன். சிறப்பிழந்தேன். இல்லத்தில் நீங்கள் சென்ற நாள் முதலாய் உங்களைப்போல அன்பும் பாசமும்தர உலகில் எவருமில்லை. நேரில் வந்த தெய்வமென நிறைவோடு வாழ்ந்திருந்தேன். வாழ்ந்திருந்த காலமெல்லாம் வசந்தம் தவழவிட்டு வாழ்ந்தது போதுமென்றோ வானுலகம் சென்றீர்கள்? இடம் பெயர்ந்த காலம்முதல் எப்போ சொந்த வீடு போவோம் என்றிருக்க என தெய்வமே சொர்க்க வீட்டுக்கு அழைப்பு வந்ததோ? எங்கள் பாசத்துக்கு அடுத்த பிறவியிலும் துணையாக வாவென்றீர், என் பயணம் முடியுமுன் உங்கள் பயணம் முடிந்ததோ? என் உயிர் பிரியுமட்டும் கவலையும் தீராது, கண்ணீரும் ஓயாது, காலமெல்லாம் கண்ணீரையே காணிக்கையாக்குகிறேன்! *உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை வேண்டுகிறேன்.*

பழையபாலத்தடி,
தொண்டமனாறு. (C/22886)

ம.பரமேஸ்வரி
(மனைவி)




யாழ்ப்பாணம், இல. 32, கஸ்தூரியார் வீதியிலமைந்துள்ள

அபிநயா ஜுவலர்ஸ்

ஸ்தாபனத்தினர்

இன்று (11.07.2002) வியாழக்கிழமை தமது ஓராண்டு நிறைவை முன்னிட்டு பூர்த்திவிழாக் கொண்டாடும் மகிழ்ச்சியை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள்.

தங்கப்பவுண் வியாபாரத்தில் முன்னணி வகிக்கும், உங்கள் இளமை எழிலுக்கு அழகூட்டும், கண்கவர் டிசைன்களிலான அசல் 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து பெற்றிட இன்றே நாடுங்கள்: (C/22893)

ABINAYA JEWELLERS
32, Kasthuriar Road, Jaffna.


## தென்மராட்சியில் இன்று முக்கிய கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜூலை11

தென்மராட்சி பிரதேச அரச, அரச சார்பற்ற, பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்துத் திணைக்களத் தலைவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், வணிகர் மன்றங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கலைவாணன் கேட்டுள்ளார். (-3-117)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.(-3-117)


தேவை

கணனி தமிழ் டைப்பிங் தெரிந்தவர் தேவை. ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். சந்திக்கவேண்டிய நேரம் சனி, ஞாயிறு 9-6
தொடர்பு முகவரி:
SUBRA (14) கல்வி நிறுவனம்.
சித்தன்கேணி. (C/22888)

லக்ஷ்மி இணுவில்.
அஜித், ப்ரியாகில், ரகுவரன்
ரெட்
தினசரி: 10.30,2.30,6.30 (ப.நே.) (5674)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல் 11.00, 3.00 மணி காட்சிகள்
சூர்யா, லைலா நடித்த
நந்தா
பிற்பகல் 6.30மணிக்கு மட்டும்
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
THE WORLD IN NOT ENOUGH
(ஆங்கிலப்படம்) (5835)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜீத், ஜோதிகா, வடிவேல்
ராதாரவி நடித்த
ராஜா
காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30 (C/22753)

நிறஞ்சனாஸ்
சங்கானை
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா
நடித்த
படையப்பா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C/22754)


# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
*திரு.சி.சிவநேசன் அவர்களின் அன்புத் தாயார்*

## அமரர் சின்னத்துரை பொன்னம்மா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியரின் நலன்புரிச் சங்கம், வலிகாமம் வடக்கு
(C/22890) பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சபாபதிப்பிள்ளை முத்தாட்சி

கைதடி மத்தியைச் சேர்ந்த திருமதி சபாபதிப்பிள்ளை முத்தாட்சி நேற்றுமுன்தினம் (09.07.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கைதடி மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் யோகேஸ்வரன் (சுவிஸ்), யோகராணி (சுவிஸ்), யோகேஸ்வரி (கைதடி), யோகச்சந்திரன் (சுவிஸ்), யோகராஜா (நோர்வே) ஆகியோரின் தாயாரும் செல்வராணி (சுவிஸ்), செல்லத்துரை (சுவிஸ்), சண்முகம் (கைதடி), காமினி (சுவிஸ்), சிவானந்தி (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் அருள்விழி, இளமாறன் ஜெயராஜகுரு, பாமினி, தமிழினி, சஞ்சீவன், றஜீவன், விஜிதரன், சசிகரன், லோகறஜனி, நிலானி, ஐந்தூரி, அபிரேஷக் ஆகியோரின் பேர்த்தியும் பிரியங்காவின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல்மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மத்தி,*
*கைதடி.* (5845)

தகவல்:
வே.சண்முகம் (மருமகன்)

## திருமதி சவிரிமுத்து மரியம்மா

(செல்லம்மாக்கா)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சவிரிமுத்து மரியம்மா 07.07.2002 ஞாயிற்றுக்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் Meelmolen 07, 1703 VM Heerhugo-waard, Hollandஇல் இன்று (11.07.2002) வியாழக்கிழமை நடைபெறும்.

இன்று (11.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதில் பங்குபற்றி அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிக்கும்படி எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*32/16, அச்சக வீதி,*
*யாழ்ப்பாணம்.* (5847)

தகவல்:
மரியதாஸ் குடும்பம்
(மகன் குடும்பம்)

## சின்னத்துரை செல்வராசா

புலோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் வண்ணாங்கேணி, பளையை வசிப்பிடமாகவும் சுவிஸில் தொழில் புரிந்தவருமாகிய சின்னத்துரை செல்வராசா நேற்று (10.07.2002)புதன்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் சின்னத்துரை மற்றும் இலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகம்மா தம்பதியினரின் மருமகனும் தங்கமலரின் அன்புக் கணவரும் லதுஜா, தனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| நிரந்தர முகவரி: | தற்போதைய முகவரி: | தகவல்: |
|---|---|---|
| *விஷ்ணு கிரி,* | *உடையார் லேன்,* | திருமதி செ.தங்கமலர் |
| *வண்ணாங்கேணி,* | *பொற்பதி வீதி,* | (தவம் - மனைவி) |
| *கண்டி வீதி, பளை.* | *கொக்குவில்.* | (5852) |

## திருமதி சபாரட்ணம் இராசமணி

இமையாணன், துவாளி வீதி, உடுப்பிட்டியை வதிவிடமாகக்கொண்ட சபாரட்ணம் இராசமணி அவர்கள் 08.07.2002 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிந்தாமணி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற தம்பிமுத்து சீதவனின் மருமகளும் சரோஜினிதேவி, கணேஸ்வரி, சுதந்திரதேவி, புவனேந்திரன் (கனடா), நவமணிதேவி, காலஞ்சென்ற ஜெகநாதன், ரெங்கநாதன், சியாமளாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரட்ணவரதன், காலஞ்சென்ற சந்திரசேகரப்பிள்ளை, மகேந்திரம், றஞ்சிதமலர் (கனடா), ரட்ணவதனி, பாக்கியதேவி, ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (11.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இறுதி ஆராதனை நடைபெற்று, நல்லடக்கத்திற்காக பூதவுடல் வல்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துவாளி,*
*உடுப்பிட்டி.* (C/22895)

தகவல்:
நவமணிதேவி (மகள்)

## சின்னத்தம்பி மாணிக்கவாசகர்

*(உரிமையாளர், வாசன் ஸ்ரூடியோ, மாலிப்பாம் வீதி, யாழ்ப்பாணம்)*

கல்வயலை வசிப்பிடமாகக்கொண்ட சின்னத்தம்பி மாணிக்கவாசகர் அவர்கள் 07.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தையல்நாயகியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் மனோகரன் (ஜேர்மனி), சுகுமாரன் (ஜேர்மனி), சிவகுமாரன் (ஜேர்மனி), சிறிதரன் (பிரான்ஸ்), சிறிகாந்தன் (கனடா), தர்மினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி, தமயந்தி, வசந்தகுமாரி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விநுசன், தாரணி, ரஞ்சா, மதன், வாசுகி, சுகந்தா, வசலன், ஸ்ரீபன், கெவின், பிருந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் S.நல்லையா (புனர்வாழ்வளிப்பு, மீள்குடியமர்த்துகை மற்றும் அகதிகள் விவகார அமைச்சின் பணிப்பாளர்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சந்திரபுர கொட்டடி தூர இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி வடக்கு.* (5856)

தகவல்:
மா.தையல்நாயகி (மனைவி).

## கருணா...வின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசியல்துறை சிறப்புப் பொறுப்பாளர் கரிகாலன், அரசியல்துறைப் பொறுப்பாளர் விசு, துணைப் பொறுப்பாளர் நுரை ஆகியோரும் கலந்து கொண்டனர். காலை 10 மணிக்கு ஆரம்பித்த இந்தப் பேச்சுக்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் இடம் பெற்றன.

சந்திப்பில் கருணா மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உறவுகளைப் பலப்படுத்தி அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் உத்தரவாதம் அளித்துள்ளனர். எனவே இரு இன மக்களும் தீய சக்திகளின் செயலுக்குத் துணைபோகக்கூடாது - என்றார்.

பொலிஸ் காவலரண்களுக்கு மத்தியில் உள்ள வர்த்தக நிலையங்களே கலவரத்தின்போது தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த போராளிகள் [illegible] குடும்ப ஊறுப்பினர் [illegible] சின்றனர். [illegible] கடல்வழிப் போக்குவரத்தை ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கருணா கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது இரு [illegible]யிலான சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்குடன் இரு இனங்களையும் சேர்ந்த தலா 15 பேர்களைக்கொண்ட நட்புறவுக் குழுக்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வீதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேவேளை, இந்த வீதியில் உள்ள வேலணை துரைச்சாமி வித்தியாலயத்தின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை இந்த வீதியைப் பாவிக்கப் படையினர் நேற்று அனுமதித்தனர் என்றும் -

இதன் [illegible]மாக மாணவர்கள் தமது [illegible]போராட்டத்தைக் கைவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

ஏனையோர் அங்குள்ள முகாமைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதை ஊடாகச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(ம-3-16)

## செங்கலடி - பதுளை வீதி 15 ஆம் திகதி திறப்பு!

கொழும்பு,ஜூலை11

செங்கலடி - பதுளை (ஏ-5) வீதியில் மகாஓயா முதல் செங்கலடி வரையான 40 கிலோ மீற்றர் தூர வீதி எதிர்வரும் 15ஆம் திகதி மக்கள் போக்குவரத்துக்கு மீண்டும் திறக்கப்படவுள்ளது.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு மற்றும் அரசாங்க சாமாதான செயலகம் என்பன இணைந்து நேற்று இத்தகவலை வெளியிட்டன. (ம)

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வுக்கு எதிராக நேற்றுமுன்தின மிரவு பிணையில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

திருமங்கலம் நீதிபதி வெங்கடாசலபதி இந்த உத்தரவை திருமங்கலம் மாவட்ட பொலீஸ் அதிகாரி கர்ணனுக்கு விடுத்துள்ளார்.

'பொடா' சட்டத்தின் கீழ் நேற்றுமுனதினம் கைதுசெய்யப்பட்ட எட்டுப் பேரும் 30 நாள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அப்போது வைகோவுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்க நீதிபதி மறுத்துவிட்டார். ஏதாவது சட்டச் சிக்கல் இருக்குமோ என்று தயங்கினார்.

அதை அடுத்து மதுரை மாவட்ட செசன்ஸ் நீதிமன்ற உதவி நாடப்பட்டது. 'நீங்களே முடிவெடுக்கலாம்' என்று செசன்ஸ் நீதிமன்றம் கூறியதை அடுத்து வெங்கடாசலபதி வைகோவுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தார். (ம)

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும் ஊர்வலத்தில் சென்றோர் பொலீஸ் தடையை மீறி பிரதமரின் அலரிமாளிகை அலுவலகத்தை நோக்கி முன்னேறத் தொடங்கினர். இதனால் பொலீஸார் ஊர்வலக்காரர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தினர். அதில் ஐவர் காயமடைந்தனர்.

இறுதியில் ஊர்வலத்தில் சென்றோர் பிரதமரின் அலுவலகத்தில் பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்து அவருடன் உரையாடினர்.

பின்னர் அவர்கள் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினர். அவரிடமும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.(ம)

## பண்டிதமணி மு.கந்தையா காலமானார்!

வலி.வடக்கு,ஜூலை11

மூத்த சமயப் பெரியாரும் சைவ சித்தாந்த ஆய்வாளருமான இலக்கிய கலாநிதி, பண்டிதமணி மு.கந்தையா நேற்றுத் தனது 85ஆவது வயதில் காலமானார்.

ஏழாலையைச் சேர்ந்த இவர் 10இற்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். நெடுங்காலமாகச சமயப் பணியாற்றி வந்துள்ளார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஏழாலையில் இடம்பெறவுள்ளன.

அவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இந்து சமயப் பேரவை அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

(ம-3)

## தம்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்கு அரசுத் தரப்பு தயாராகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் செயலகத்துக்கென 240கோடி ரூபா செலவில் சொகுசு வாகனங்கள் கொள்வனவில் ஊழல் இடம்பெற்றதாகத் தெரிவித்து, அதனுடன் ஜனாதிபதியைத் தொடர்புபடுத்தி, அரசுத் தரப்பில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதியின் பேச்சாளர் நேற்று அடியோடு நிராகரித்தார்.

பாதுகாப்பு விவகாரங்களுக்காக 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்த வாகனங்கள் வாங்கப்பட்டன என்று அவர் சொன்னார்.

'அந்த நேரத்தில் ஜனாதிபதிக்கும் அவரது மூத்த அமைச்சர்களுக்கும் புலிகளினால் அதிகளவு உயிராபத்து நிலவியது. இதனால் இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 2000 டிசெம்பரில் கொழும்பில் ஜனாதிபதியின் உயிருக்கு உலை வைக்கும் தற்கொலைத் தாக்குதல் நடநத சமயம் ஜனாதிபதியைக் காப்பாற்றியது இடைநடுவில் நின்ற இந்த வாகனங்களுள் ஒன்றுதான்' - என்றார் 'ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்கள் குறித்து ஜனாதிபதி ஆழ்ந்த கவலையுற்றிருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதியின் பேச்சாளர், மக்களை அச்சுறுத்திப் பணம் பறிக்கும் நடவடிக்கையில் பெரிய அளவில் புலிகள் ஈடுபட்டதே இக்கலவரங்களுக்குக் காரணம் என்றும், இது முழு அமைதி முயற்சியையுமே பின்னடைய வைத்துவிடும் என ஜனாதிபதி கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

(ம)

## துப்பாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தப்பிச்செல்லும்போது அங்கு நின்ற மோட்டார் சைக்கிளின் திறப்பையும் எடுத்துச்சென்றதாகவும் -

இவர்கள் வெளியேறியதும் வீட்டுக்காரர் கூக்குரல் இட்ட சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் ஓடிவந்ததாகவும்-

அச்சமயம் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு அவர்கள் ஓடி விட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை, கண்காணிப்புக்குழு ஆகியவற்றுக்கு வீட்டுக்காரர் முறைப்பாடு செய்தனர்.

மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்ததுடன் வீட்டு முற்றத்தில் காணப்பட்ட துப்பாக்கிச் சன்னத்தையும் பொலீஸாரிடம் வீட்டுக்காரர் ஒப்படைத்துள்ளனர். (ம-3-29-ரி)

## நீர்கொழும்பு,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னர் அவை காலப்போக்கில் கைவிடப்படுகின்றன.

கடைசியாக நாம் உண்ணாவிரதமிருந்த சமயம் வாக்குறுதிகளை வழங்கி, எமது போராட்டத்தை முடித்து வைத்தார் சட்டத்தரணி விநாயகமூர்த்தி எம்.பி. ஆனால், இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒன்றும் நடந்தபாடாக இல்லை.

நாங்கள் இருநூறு கைதிகள். எமது குடும்பங்களின் வாழ்க்கையை தமிழ் எம்.பிக்கள் ஏன் சிந்திக்க மறுக்கிறார்கள்? எமது இந்தக் கோரிக்கைக்கு ஒரு நல்ல பதிலை எதிர்பார்க்கின்றோம்.

- இவ்வாறு கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கிறது.

(ம)

## முஸ்லிம் எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னணி ('நுஆ') மற்றும் ஜே.வி.பியைச் சேர்ந்த முஸ்லிம் எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் பங்குபற்றவில்லை.

தமது ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் முஸ்லிம் எம்.பிக்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

முஸ்லிம்கள் மத்தியில் பிளவு, கருத்து முரண்பாடு போன்றவை இருப்பதே தற்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம் என்று சில பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் அது தவறு. நாம் ஒரே குரலில் ஒன்றாக ஒலிப்போம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அரசுத்தரப்பைச் சேர்ந்த முஸ்லிம் எம்.பிக்கள் இருபிரிவாக புலிகளின் பிரமுகர் கரிகாலனைச் சந்தித்துப் பேசியுள்ளனர். ஆனால் அதன் பின்னரும் கூட சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. சில இடங்களில் எமது விவசாயிகள் தமது வயல்களுக்கு இன்னும் செல்லமுடியவில்லை. அவர்களால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை.

ஆகவே, முஸ்லிம்களின் பாதுகாப்பு, அரசியல் உரிமைகள் ஆகியவை குறித்து புலிகளுடன் நேரடியாகப் பேசி உறுதிப்படுத்திக்கொள்ள முயல்கிறோம்.

நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் புலிகளுக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம். புலிகளுடன் இணைந்தே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விழைகின்றோம்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் சமாதானப் பேச்சுகள் குழம்பிவிடக்கூடாது என்பதில் முஸ்லிம்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்பதையும் தெளிவுபட வெளிப்படுத்துவது நமது கடமை.

முஸ்லிம்களின் நியாயமான பிரதிநிதித்துவம், சுதந்திரமான வாழ்வு, சுயாதீனமான செயற்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காகவே புலிகளுடன் பேச விரும்புகின்றோம்.

எங்களோடு புலிகள் பேசவேண்டும் என்பது குறித்து பிரதமர் ஊடாக நோர்வேக் குழுவிடம் வற்புறுத்துவோம். - என்றார்.

"நாங்கள் இனரீதியாக, சமூக ரீதியாக ஒன்றுபட்டிருக்கின்றோம். எங்களுக்குள் நிலவும் அரசியல் வேறுபாடு, கருத்து முரண்பாடு காரணமாக நமது சமூகம் பாதிப்படைய இடமளிக்கமாட்டோம்" - என்று சொன்னார் அமைச்சர் முஹம்மது.

"அரசியல் ரீதியாக, நாம் (முஸ்லிம்கள்) முரண்பட்டிருப்பதே பிரச்சினைகளுக்குக் காரணம் என்று புலிகளும் ஏனையோரும் உலகுக்குக் காட்ட முயற்சிக்கின்றனர். அது தவறு. நாம் ஐக்கியப்பட்டு ஒரே குரலில் ஒலிக்க - செயற்பட - தயாராக இருக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம்." - என்றார் பௌஸி எம்.பி.

(ம)

## மரண அறிவித்தல்கள்

### இலக்கிய கலாநிதி பண்டிதமணி
### மு.கந்தையா

ஏழாலை மேற்கைச் சேர்ந்த பண்டிதமணி மு.கந்தையா அவர்கள் நேற்று (10.07.2002) புதன்கிழமை முன்னிரவு சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் ஞானலக்சுமியின் பாசமிகு கணவரும் திருமதி சுசிலாதேவி பேரின்பநாதன், திருமதி சத்தியபாமா கருணாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் வே.பேரின்பநாதன், மு.கருணாநிதி ஆகியோரின் மாமனாரும் பே.மயூரேசன், பே.பிரதாபன், பே.விஜிதரன், க.தர்சினி, க.சுலக்சனா, க.சுபாஜி ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை மயானத்தில் தகனம்செய்யப்படும்.

*"சக்தி முற்றம்",*
*ஏழாலை மேற்கு.*

தகவல்:
திரு.மு.கருணாநிதி (மருமகன்)
(சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

(C/22896)

### V.M. யோசவ்
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட V.M. யோசவ் அவர்கள் நேற்று (10.07.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி ஜேற்றூட் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் அன்ரன் (கனடா), ஜெயம் (கனடா), ஆனந்தாஜோசவ் (கிங்சன் கல்லூரி, கொழும்பு), அருட்செல்வி மேரி பிரான்சிஸ் (திருக்குடும்ப கன்னியர் சபை மகாண ஆலோசகர், சென்னை), ஜெயராஜன் (புனித வளன் அச்சகம்), குமார் (கனடா), திருமதி ஜோசப்பின் ஜெபரத்தினம் (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசீலி (கனடா), ஜெயராணி (கனடா), காலஞ்சென்ற சுலோசனா மற்றும் மேரி சறோஜா (ஜெயா), வசந்தி (கனடா),ஜெபரத்தினம் (உப-அதிபர், யா/திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிறின் (கனடா), றோஷன் (ஆஸ்திரேலியா), சுனித்தா (கனடா), டினேஷ் (கனடா), டிலக்ஷன் (லண்டன்), டயானி (லண்டன்), மரியனிகயானி, நிஜானி (இருவரும் மாணவிகள், யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), யூட் டனிஸ்ரன் (மாணவன்,யாழ்.மத்திய கல்லூரி), பிறேன் (கனடா), ஜெயோலின் (கனடா), ஜோய் மாதவன், ஜோண்சன், திவ்வியானந் (இருவரும் மாணவர், யா/சம்பத்திரிசியார், கல்லூரி) மற்றும் யூட் (கனடா), ரவீந்திரன் (கனடா), விஜி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெறோன் (கனடா), அக்ஷயா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25,மார்டின் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
அ.ம.ஜெபரத்தினம் (மருமகன்)

(5855)


சொகுசு பயணத்திற்கு
கிலோ மீற்றருக்கு 18 ரூபா மட்டுமே!
அழையுங்கள் 2742
அம்பாள் ரவல்ஸ்
கம்பஸ் லேன்,
திருநெல்வேலி. (5854)

பிறைற்றின்
கல்வி நிலையம்
சங்கத்தானை.
A/L2004
LOGIC
S.R.J.[illegible]
புதிய பிரிவு ஆரம்பம்: 13.07.200[illegible]
சனி 10am. (5755)

SUBRA (14)
சித்தன்கேணி.
Spoken English and Grammar
By: BRITTO
புதிய பிரிவு
Tu. - Thu. - 10.00 - 11.00
அனுமதிகளைப் பெறலாம்.
பேச்சுச் சிங்களம்
திரு.லீலாக்கிருஷ்ணன்
Tu. - Thu. 8.00 - 9.00
2003 A/L
Geography Paper Class
S.ஜங்கரன்
Wed.,Thu., Fri. - 6.00 -7.00
அனுமதிகளைப் பெறலாம்.
(C/22887)

இடம்மாற்றம் (11.07.2002)
அனைத்து கொம்பியூட்டர் ஒவ்(f)செற் பிறிண்டிங் வேலைகளுக்கும்.
கங்கை ஒவ்(f)செற் பிறிண்டேர்ஸ்
184 A, நாவலர் வீதி (பிறவுண் வீதிக்கு முன்பாக),
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(5829)

Mihimandala
Protect Environment for a Better Future
புகைப்படக் கண்காட்சி
சூழல் வனம் பேணும் 'மிகிமண்டல' என்னும் நிறுவனம் வனவளம் பற்றிய பலவர்ண புகைப்படக் கண்காட்சியை ஒழுங்குசெய்துள்ளது. மாணவர்களுக்கும், புகைப்பட ஆர்வலர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பாகும்.
இடம் : புனித பத்திரிசியார் கல்லூரி
காலம் : நாளை (12.07.2002) வெள்ளி
மாணவர்களுக்கு மட்டும்.
13.07.2002 சனி
மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும்.
நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை4.30மணிவரை
பிரவேசம் : இலவசம்.
அதிபர்,
புனித பத்திரிசியார் கல்லூரி.
(5617)

MS Office
புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம்: 14-07-2002
DIPLOMA IN MICROSOFT OFFICE
இற்கான புதிய விசேட பிரிவுகள் 14.07.2002 அன்று காலை 10மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றன. இப்பிரிவில் இணைந்துகொள்ளும் மாணவர்கள் 14.07.2002 இற்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.
(C/22841)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.